Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-20 | 04-01-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை -321


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-11120)

## முல்லை, வடமராட்சி கிழக்கில்

# பாதிக்கப்பட்டோரைத் தங்கவைக்க

# தற்காலிகக் குடில்கள் அமைக்கத் திட்டம்!

## துரித கதியில் ஆரம்ப நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

**கடற்பெருக்கினால் இருப்பிடங் களை இழந்த நிலையில் பாடசாலை களில் தங்கவைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு மக்களுக்கு தற்காலிகக் குடில்கள் அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

மேற்படி அனர்த்தத்தினால் இடம் பெயர்ந்துள்ள முல்லை நகர மக்கள் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி குமுழமுனைப் பாடசாலை, கைவேலிப் பாடசாலை, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் மற்றும் பொதுநோக்கு மண்டபங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு இடம்பெயர்ந்தோர் நலன்காப்புப் பணியில் ஈடுபட்டுள்ள செயலணிக் குழுவினர் பாடசாலைகளில் உள்ள மக்களுக்கு தற்காலிகக் குடில்களை அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இதில் முதற் கட்டமாக முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தங்கியுள்ள 100 குடும்பங்களுக்கு முள்ளியவளை மாஞ்சோலை எனுமிடத்தில் 100 தற்காலிகக் குடில்களை அமைத்துக் கொடுக்கவுள்ளனர். இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

(12ஆம் பக்கம் பார்க்க)

### கடற் பேரலைத் தாக்கத்தால்

## இழப்புக்களைச் சந்தித்தோர்க்கு உளவள ஆலோசனை வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கடல் அலைத் தாக்கத்தினால் உயிரிழப்பு மற்றும் உடமை இழப்புக்களைச் சந்தித்து உள ரீதியான பாதிப்புக்குள்ளானவர்களுக்கான உளவள ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழீழ மருத்துவப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் இச்செயற்பாடானது மேற்படி அனர்த்தத்தினால் பெரும் அழிவுகளைச் சந்தித்தவர்களும், மற்றும் அலையில் சிக்கி மீண்டவர்கள் அடைந்திருக்கின்ற உளரீதியான பாதிப்புக்களையும், மனக்குழப்பங்களையும் நீக்கும் ஆலோசனைகளை வழங்குவதாக அமைவதோடு இவ்வாறு இடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது குறித்து

# தமிழ்ச்செல்வன்-கரோல்பெலமி கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி கரோல் பெலமிக்கும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையேயான சந்திப்பொன்று நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சந்திப்பானது கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் நேற்று மாலை 1.00 மணியளவில் நடைபெற்றது இச்சந்திப்பில் வடகிழக்குப் பகுதியில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பான சில முக்கிய விடையங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சந்திப்பின் முடிவில் யுனிசெவ் அதிகாரி கருத்து தெரிவிக்கையில் தான் நேரடியாகச் சென்று அனர்த்தம் நடந்த பகுதியைப் பார்வையிட்டேன். அங்கு பார்க்க முடியாத அளவிற்குப் பாரிய இறப்புக்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக சிறுவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்

(12ஆம் பக்கம் பார்க்க)



### மட்டு. அம்பாறையில் நிவாரணப்பணி

# புலிகள்-அதிரடிப்படை சந்திப்பு

# கேணல் பானுவும் பங்கேற்பு!

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றுள்ளது.

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட கிழக்குப் பிராந்திய மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகவே இக் கலந்துரையாடல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டச் சிறப்புத்தளபதி கேணல் பானு, மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், தளபதி ஜனார்த்தனன், மனோமாஸ்ரர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதிரடிப்படை சார்பில் அதன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய தேசியபாதுகாப்பு ஆலோசகர் ஜே.என் டிக்சித் காலமானார்



இந்திய பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான ஜே.என்.டிக்சித் நேற்று அதிகாலை மாரடைப்பால் காலமானார் இலங்கை, பாகிஸ்தான், வங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் முக்கிய காலகட்டங்களில் தூவராகப் பணி புரிந்த இவர் 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதற்குப் பெரும் பங்களிப்பை வழங்கியவர் என்பது நினைவு கூரத்தக்கது.இந்தியாவின் முக்கிய பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு ஆலோசனை வழங்கும் முக்கிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.சபை செயலாளர் இலங்கைக்கு விஜயம்?

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபிஅனான் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆழிப்பேரலைகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இந்தோனேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கான தனது விஜயத்தைப் புதன்கிழமை ஆரம்பிக்கும் கொபிஅனான் முதலில் இந்தோனேசியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும். இந்தோனேசிய விஜயத்தை முடித்துக்கொண்டு இலங்கைக்கு வருகைதரவுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எனினும் அவர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளமாட்டார் என்றும் வேறொரு தகவல் தெரிவிக்கிறது.

# பாகிஸ்தானும் இரு கடற்படைக் கப்பல்களை கொழும்பிற்கு அனுப்பி வைக்க முடிவு!

### இந்திய, அமெரிக்க கப்பல்கள் வருகையை அடுத்து நடவடிக்கை

பாகிஸ்தான் இலங்கைக்கு இரண்டு யுத்த கப்பல்கள் மூலம் 400 கடற்படை சிப்பாய்களை அனுப்புவதற்கு ஆயத்தமாகிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்படும் மீட்புப் பணிகளில் சிறிலங்கா படைகளுடன் இணைந்து செயலாற்றுவதற்காகவே பாகிஸ்தான் தனது கடற்படையை அனுப்பிவைக்க உள்ளதாக பாகிஸ்தானிய தூதாரகம் தெரிவித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே தனது கடற்படைத் துருப்புகளை இலங்கைக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்தியாவின் முக்கிய போர்க்கப்பல்கள் மூன்று இலங்கைக்கு வருகைதந்துள்ளன. இந்த நிலையில் பாகிஸ்தானும் தனது கடற்படையை இலங்கைக்கு அனுப்பவுள்ளமை பலத்த சந்தேகங்களை தோற்றுவித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தற்காலிக சாரதிகளுக்கான
# விண்ணப்பங்கள் கோரல்

**கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் தற்காலிக சாரதிகளை நியமிப்பதற்காக பின் குறிப்பிடப்படும் தன்மையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

01. கிளிநொச்சி மாவட்டத்தினை சொந்த வசிப்பிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
02. கல்விப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையில் குறைந்த பட்சம் எட்டாம் தரத்தில் /ஆண்டு ஒன்பதில்/ சித்திபெற்றிருத்தல்வேண்டும்.
03. மோட்டார் வாகனச் சாரதியாக மூன்று ஆண்டு அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் நிருபிக்க வேண்டும்.)
04. ஆகக் குறைந்தது ஐந்தடி இரண்டரை அங்குலம் உயரமாக இருக்க வேண்டும்.
05. இரவிலும், பகலிலும் கடமையாற்றக்கூடியதாக நல்ல உடல் ஆரோக்கியம் உடையவராகவும் இருக்க வேண்டும்.
06. பெருந்தெருக்கள், சட்டக் கோவை பற்றி நல்ல அறிவு கொண்டவராக இருக்க வேண்டும்.
07. கனரக வாகன வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது இலகு வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருக்கவேண்டும்.
08. 01.02.2005ஆம் திகதியில் வயது 18இற்கும் 35இற்கும் இடைப்பட்டவராக இருக்கவேண்டும்.

**விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 12ஆம் திகதிக்கு (2005.01.12)முன்னர் கிடைக்கக்கூடியதாக அரச அதிபர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

**தி.இராசநாயகம்,**
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-11171)

## வரிவிளம்பரம்

**வகுப்புக்கள் ஆரம்பம்**

கேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி 2007. A/L கணித, விஞ்ஞான கலை வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்:- 03.01.2005 (திங்கள் 8.00 A.M)(5448)

### தவறிவிட்டது

03.01.2005 அன்று புதுக்குடியிருப்பிற்கும், தருமபுரத்திற்கும் இடையில் க.சாந்தினி என்பவரது தேசிய அ.அட்டையும் போ.க.பிரிவின் நிரந்தர பயண அட்டையும் ஒரு தொகைப் பணமும் அடங்கிய கறுப்பு நிறப் பேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதம் பணிமனையில், அல்லது கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(சி-10538)

**விஞ்ஞான பீடம்**
**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்**

## அறிவித்தல்

விஞ்ஞான பீட கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் 10.01.2005 திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றேன்.

(சி-11059) **துணைவேந்தர்.**

# உதவிச் செயற்பாடுகள் தொடர்ந்து எதிர்பார்க்கப்படுகிறது

முல்லைத்தீவில் சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நலன் விரும்பிகளால் வழங்கப்பட்ட உதவிச் செயற்பாடுகள், மற்றும் உதவிபொருள் வழங்கல் என்பன தற்போது குறைவடைந்து வருவதால் மக்களைத் தொடர்ந்து பராமரிக்கச் சிரமமாக உள்ளதாக அப்பகுதி செயலணிக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி அனர்த்தம் நடந்த அடுத்த நாள் முதலாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நலன் விரும்பிகள் உடனடி நிவாரணத்திற்கான பொருட்களை உடனடியாக தந்துதவினர். இவர்களின் இம் மனப்பான்மையைப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் அப்பகுதிச் செயலணிக்குழுவினர்.தற்போது இவ்வாறான உதவி வழங்கும் நலன்விரும்பிகளின் தொகை குறைவடைந்து வருவதனால் இடம்பெயர்ந்து துன்பப்படும் மக்களுக்கு முழுமையான நிவாரணங்களை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டு வருவதோடு மக்களுக்கான உணவு வகைகளும் பற்றாக்குறையாக உள்ளதாகத் தெரிவிக்கும் இதேவேளை உதவிவழங்கும் மனப்பான்மையுடையவர்கள் மனிதாபிமான உதவிகளைச் செய்துதவுமாறும் கேட்டுள்ளனர். (ச.கு)


## வகுப்புகள் ஆரம்பம்

**ஆங்கில வகுப்புகள் ஆரம்பம் லெப். ஜெனார்த்தனன் ஆங்கில கல்வி நிலையத்தில் புதிய மாணவர்கள் 15.01.2005இற்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.**

**நிர்வாகி**
**ஆசிரியர் சி.பாலசிங்கம்**
**1ஆம் வட்டாரம்**
**முள்ளியவளை.**

(5084)

## காணவில்லை



இவர் முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த அமலதாஸ் (அமலா) என்பவரின் மகன் **அ.ஜேக்குமார் (சுரேன்)** என்பவர் கடந்த கடல் அனர்த்தத்தின்போது காணாமற்போய்விட்டார். இவரது வயது 18. இவர் முல்லைத்தீவு மகா வித்தியாலய உயர்தர மாணவன். இவரை இரணைப்பாலை 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சூ.அலேஸ் (ஐயாமணி) என்பவர் தேடுகின்றார். இவரைக் கண்டவர்கள், தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் புலிகளின் குரலுடனோ அல்லது ஐயாமணியுடனோ தொடர்பு கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
**சூ.ஐயாமணி,**
5ஆம் வட்டாரம்,
இரணைப்பாலை.

(5085)


**British Business School**
**Kandy Road**
(Near/Kanthasamy Kovil)
Kilinochchi

British BUSINESS SCHOOL

50 Student Offer

**விசேட கற்கைநெறிகள்.**

**கணனிக்கற்கை நெறிகள்.**

- Junior Diploma in Computer Science 03 Months
- Diploma in Microsoft Office 05 Months
- Diploma in Desktop Publishing 06 Months
- Diploma in Web Designing 06 Months
- Diploma in Computer hardware 03 Months
- Fast Track Corses

**ஆங்கிலக் கற்கை நெறிகள்.**

- Certificate in English 03 Months
- Diploma in English 06 Months
- Advance Diploma in English 06 Months

**சிறுவர்களுக்கான விசேட பாடநெறிகள்.**

**5வயது தொடக்கம் 14வயதுவரை**

- Foundation
- LowerIntermedials
- Intermedials
- UpperrIntermedials



**O/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கு விசேட,ஆங்கில,கணனிப்பாடநெறிகள்.**

☎ ஒவ்வொரு கற்கை நெறி முடிவிலும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற எமது சான்றிதழ் வழங்கப்படும்.

☎ கட்டணங்கள் எமது கட்டணங்களை விட 20% சலுகைக்கட்டணங்கள் இங்கு மட்டும் வழங்கப்படும்.

☎ முதலில் பதிவுசெய்யும் மாணவர்களுக்கு விசேட சலுகைகள் மட்டும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
British Business School
Kandy Road,Kilinochchi
Near /Kanthasamy Kovil

(சி-11172)


## கண்ணீர் அஞ்சலி

மலர்வு
10 - 07 - 1935



உதிர்வு
26 - 12 - 2004

# அமரர் கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை

**(உடுத்துறை, தாளையடி)**

26.12.2004 அன்று ஏற்பட்ட கடற்புவி அனர்த்தத்தின் காரணமாக அகால மரணமடைந்த அன்னாரின் செய்திகேட்டு எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இவரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


இவரின் பிரிவால் துயருறும்
**கணவன்,மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(5528)

# சுனாமி பேரலையால் அழிவுற்ற தாய்லாந்தின் கரையோரப்பகுதி சீரமைப்புப் பணியில் யானைகள்

(பாங்கொக்)

**தாய்லாந்தில் சுனாமி இராட்சத அலைக்கு பலியானோர் எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. சுனாமி சீற்றத்தால் சின்னாபின்னமான நாட்டின் தென்னகக் கடலோரத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்புப்பணியில் யானைகளும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.**




சடலங்கள் அப்புறப்படுத்தப்படுகின்றன. பௌத்த ஆலயங்களே தற்காலிகமாக சவ அறைகளாக மாற்றப்பட்டுள்ளன. சடலங்கள் அங்கு கொண்டுவரப்பட்டு அடையாளம் காணப்படுகின்றன. சுனாமியில் இறந்தவர்களில் நிறையப்பேர் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள். இன்னும் சுமார் 6 ஆயிரம் பேர் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 8 ஆயிரமாக அதிகரிக்கும் என்று பிரதமர் தட்சின் சினவத்ர தெரிவித்துள்ளார். கட்டடங்கள், இடிபாடுகள், கிணறுகள், கரையோரப் பகுதிகளில் புதையுண்டு இருக்கும் சடலங்களைத் தேடும்பணி தொடர்ந்து நடைபெறும் என்றார். பிரதமர். இதனிடையே மத்திய தாய்லாந்திலிருந்து பங்கா யெங்க பகுதிக்கு மீட்புப் பணியில் ஈடுபடுத்தயானைகள் ஞாயிற்றுக்கிழமை ஏற்றிச் செல்லப்பட்டன.

இடிபாடுகளை அகற்றவும்,கனத்த பொருட்களை அப்புறப்படுத்தவும் இவை பயன்படுத்தப்படும். கட்டடங்களின் இடிபாடுகளை அகற்றுவதில் யானைகளை வெகுவாகப் பயன்படுத்த முடியும். குறிப்பாக சேறும் சகதியும் மிக்க வெள்ளப் பகுதிகளில் இவற்றின் உதவி உகந்ததாக இருக்கும் என்று மாவட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# அந்தமானின் பல பகுதிகள் நீரினுள் மூழ்கின

நில அதிர்வு மற்றும் அதைத்தொடர்ந்து ஏற்பட்ட சுனாமி அசுர அலைகளின் தாக்கத்தால் அந்தமான்,நிக்கோபர் தீவுகளின் நில அமைப்பு மாறிவிட்டது. இப்பிரதேசத்தில் இருந்த பல கடற்கரைப் பகுதிகளைப் பார்க்க முடியவில்லை. டிரிங்கெட் என்ற தீவு இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. பல இடங்களில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அழகிய கடற்கரைகள்,கேம்பெல்பே போன்ற பல தீவுகள் மாயமாக மறைந்துவிட்டன. இத்தகவலை, ஒருங்கிணைந்த நிவாரணப் படையின் செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் ஜெனரல் பி.எஸ்.தாக்கூர் போர்ட் பிளோரில் தெரிவித்தார். கார் நிக்கோபார் பகுதி மோசமாகப்பாதிக்கப்பட்டு அதில் சில பகுதிகள் நீரில் மூழ்கிவிட்டன போர்மிளேர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடல் மட்டம் உயர்ந்துள்ளது. இருப்பினும் எந்தத் தீவும் வெள்ளத்தால் முற்றிலும் அடித்துச் செல்லப்படவில்லை என்கிறார் லெப்டினன்ட் ஜெனரல் தாக்கூர்.



*இந்தோனேசியாவில் நிவாரணத்தைப்பெற முண்டியடிக்கும் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள்.*



*பாக்தாத் வீதியொன்றில் வாகனம் ஒன்றைச் சோதனையிடும் கவச உடையணிந்த அமெரிக்கப் படைவீரர்*

# பாக்தாத்தில் கார்க்குண்டு வெடிப்பு பேருந்தில் பயணித்த 18 இராணுவத்தினர் பலி

(பாக்தாத்)

ஈராக்கில் ஈராக்கிய இராணுவ வீரர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 18 ஈராக்வீரர்களும், ஒரு பெண்ணும் பலியானார்கள். இந்தச் சம்பவம் பாலாட் என்ற நகரத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இராணுவ வீரர்களின் பேருந்து அருகே ஒருகார் சென்றது.

வெடிகுண்டு நிரப்பட்ட அந்தக் காரைத் தீவிரவாதிகள் வெடிக்கச் செய்தனர். இதில் அந்த இடத்திலேயே 16 வீரர்களும், ஒரு பெண்ணும் பலியானார்கள். 6 வீரர்கள் காயம் அடைந்தனர் அவர்களில் 2 பேர் வைத்திசாலையில் இறந்தனர்.

வருகிற 30ஆம் திகதி தேர்தல் நடக்க இருக்கிறது. அதை நடத்தவிடாமல் தடுக்கு எண்ணத்துடன் தீவிரவாதிகள் தாக்குதலை தீவிரமாக்கியுள்ளனர்.

# அரைக் கம்பத்தில் அமெ. கொடிகள் சனாதிபதி புஷ் அறிவிப்பு

(வோஷிங்டன்)

சுனாமி பேரலையால் பலியானவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், அமெரிக்க தேசியக் கொடி ஐந்து நாட்களுக்கு அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும் என சனாதிபதி புஷ் அறிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 1,750 கோடி ரூபா வழங்கப்படும் என்றும் புஷ் அறிவித்தார்.

முதலில் அமெரிக்கா மிகக் குறைவான தொகையை அறிவித்துஇருந்தது. இது பற்றி எழுந்த விமர்சனங்களைத் தொடர்ந்து அவர் உதவித் தொகையை இப் போது உயர்த்தி இருக்கிறார். ஆனால் ஜப்பான் 2 ஆயிரத்து 500 கோடி ரூபா கொடுத்து முதலிடத்தில் உள்ளது.

# அரச படையினர்– தீவிரவாதிகள் மோதல் நே பாளத்தில் நாற்பத்தி இரண்டுபேர் பலி

(காத்மண்டு)

நேபாள நாட்டில் 2 இடங்களில் நடந்த துப்பாக்கிச் சண்டைகளில், 25 மாவோயிஸ்டுகளும், 17 இராணுவ வீரர்களும் பலியானார்கள்.

கிழக்குப் பகுதியில் கோசி நெடுஞ்சாலையில் மல்பான்சே என்ற இடத்தில், நடந்த சண்டையில் 25 மாவவோயிஸ்டுத் தீவிர வாதிகளும், 12 இராணுவ வீரர் களும் பலியானார்கள். நெடுஞ்சா லையில் தீவிரவாதிகள் ஏற்படுத்தி இருந்த தடுப்புக்களை இராணு வம் அப்புறப்படுத்தியது. இந்தச் சண்டை 5 மணிநேரம் நீடித்தது. கூடுதல் துருப்புகள், உலங்கு வானூர்தி மூலம் அனுப்பப் பட்டதும், நூற்றுக் கணக்கான தீவிரவாதிகள் அங்கு இருந்துதுப்பிஓடிவிட்டனர். கன்சன்பூா மாவட் டத்தில் நடந்த சண்டையில், 5பொலிஸ்காரார்கள் பலியானார்கள்.



*தெற்குபஸ்ராவின் ஆற்றங்கரையிலிருந்து பல்வேறு கனரக ஆயுதங்களை மீட்கும் பிரிட்டன் படையினர்.*

# ஐ.நா.சபை அருகே பரபரப்பு கத்தியுடன் கூச்சலிட்டவர் கைது

(ஐக்கிய நாடுகள்)

ஐக்கிநாடுகள் சபையின் முக்கிய நுழை வாயில் அருகே தன் கழுத்தில் தானே கத்தியை வைத்து சீன மொழியில் கூச்சலிட்டவரைப் பொலிசார் கைது செய்தனர்.

இது குறித்து ஐ.நா.சபை தகவல் தொடர்பாளர் பிரண்டன் வர்மா கூறியதாவது;

அமெரிக்காவில் மன்ஹாட்டனில் நதிக்கரையின் கிழக்கே ஐ.நா சபையின் தலைமை அலுவலகம் உள்ளது. அதன் முக்கிய நுழைவாயில் முன்பு நேற்று முன்தினம் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.அப்போது திடீரென தன்னிடம் இருந்த கத்தியை எடுத்து தன் கழுத்திலேயே வைத்துக் கொண்டு சீன மொழியில் கூச்சலிடத் தொடங்கினார். இதனால் அந்த இடமே பெரும் பரபரப்பிற்கு உள்ளானது.

தகவலறிந்தபொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து அவரைக் கைது செய்தனர். அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது உடனடியாகத் தெரியவில்லை. இச்சம்பவம் நடந்தபோது ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் தனது அலுவலகத்தில் இருந்தார். அவருக்கு எந்த ஆபத்தும் இல்லை. இவ்வாறு வர்மா கூறினார்.

நியூயோர்க் பொலிசார் கூறுகையில்; உணர்ச்சிவசப்பட்ட நிலைக்கு ஆளானதால் தான் அவர் இந்த செயலில் ஈடுபட்டார். தற்போது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். என்றனர்.



*ஆப்கானிஸ்தானின் கேந்திர நிலைஒன்றில் அமெரிக்க படைவீரர் ஒருவர்.*

# கொலம்பியா புத்தாண்டு விருந்தில் பதினேழு பேர் சுட்டுக்கொலை

(போகோடா)

புத்தாண்டு விருந்தில் கலந்து கொள்ளச் சென்ற 17 விவசாயத் தொழிலாளர்கள் கொலம்பியாவில் டேம் நகருக்கு வெளியே ஆயுதம் தாங்கிய கும்பலால் படுகொலை செய்யப்பட்டனர். இச்சம்பவம் சனிக்கிழமை நடைபெற்றது. ஆயுதம் தாங்கிய கும்பல் திடீரெனக் கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டதில் இவர்கள் இறந்ததாக டேம் நகர மேயர் கூறியுள்ளார்.

**மாலை தீவில் 1,200 தீவுகள் நீரில் மூழ்கின**

மாலைதீவு நாட்டில் சுனாமி பேரலைகள் தாக்கியதில், அந்த நாட்டின் மூன்றில் 2 பங்கு பகுதி தண்ணீரில் மூழ்கின இதைத் தொடர்ந்து மாலைத்தீவைச் சேர்ந்த ஆயிரத்து 200குட்டித் தீவுகள் அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'அரியானா மாநில ஆட்சியை இம்முறை
# பா.ஜ.கட்சியிடம் மக்கள் தரவேண்டும்

**- அத்வானி வேண்டுகோள்**

**ஆட்சி செய்ய பா.ஜ.வுக்கு ஒரு முறை வாய்ப்பைத் தந்து பாருங்கள் என்று அரியானா வாக்காளர்களுக்கு அத்வானி வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

பீகார் ,அரியானா, யார்க்கண்ட் ஆகிய 3 மாநிலங்களில் வரும் பெப்ரவரி மாதம் சட்டமன்றத் தேர்தல் நடக்க இருக்கிறது. 3.15.2003 ஆகிய திகதிகளில், 3 கட்டமாக இந்தத் தேர்தல் நடக்க உள்ளது. இந்த நிலையில் அரியானா மாநிலம் பானிப்பட் பகுதியில் பாரதிய ஜனதா நேற்றுப் பிரமாண்டமான தேர்தல் பேரணியை நடத்தியது. 3மாநிலத் தேர்தலில் முதல் ஆளாகப் பிரசாரத்தைத் தொடங்கியிருக்கும் கட்சி பாராதிய ஜனதாக்கட்சிதான்.

பானிப்பட் பேரணியில் பா.ஜ. தலைவர் அத்வானி பேசினார். அவர் பேசியதாவது; அரியானா மாநிலத்தை ஆட்சி செய்ய எல்லா அரசியல் கட்சிகளுக்கும் வாக்காளர்கள் வாய்ப்புத்தந்து பார்த்து விட்டார்கள். பா.ஜ.வுக்குத்தான் இன்னும் வாய்ப்பைத் தரவில்லை. எனவே இந்த முறை பா.ஜ.வுக்கு வாய்ப்பைத்தந்து பாருங்கள். இந்த மாநிலத்தில் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் கொண்டு வருவோம், எங்களுக்கு ஆட்சிப் பொறுப்பை அளிக்கும் மக்களுக்கு ஏமாற்றம் அளிக்கமாடடோம்.

தற்போது 6 மாநிலங்களில் பாரதியஜனதா ஆட்சி நடக்கிறது. அங்கு நிர்வாகம் சிறப்பாக நடக்கிறது. எனவே அரியானா மக்கள் இம்முறை எங்களுக்கு வாய்ப்பைத் தந்தேயாக வேண்டும். அரியானாவின் முதல்வர் ஓம்பிரகாசூ, சவஜதாலாவின் ஆட்சியை அகற்றியே ஆகவேண்டும் வாக்காளர்கள் சரியான கட்சி மற்றும் சரியான வேட்பாளர்களைத் தெரிவுசெய்து வாக்களிக்க வேண்டும். அப்போதுதான் நாட்டின் சனநாயகம் பூத்துக் குலுங்கும் பா.ஜ. ஆட்சிக்கு வந்தால் நேர்மையான திறமையான அரசை ஏற்படுத்தும் நாட்டின அரசியல் நிலையை நாங்கள் மாற்றிக்காட்டுவோம். எங்கள் அரசு விவசாயிகளின் அரசாக இருக்கும் என்றார்.



அந்தமானில் "சுனாமி" கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க மத்திய பிரதேச மாநில அரசு மருந்துப் பொருட்கள் பால்மா, தேயிலைத்தூள் ஆகிய வற்றை விமானம் மூலம் அனுப்பிவைத்தது. அந்தப் பொருட்கள் கோபால் விமான நிலையத்தில் ஒரு விமானத்தில் ஏற்றப்பட்டபோது....

## மீனவர் பெற்ற கடனை இரத்துச் செய்ய கருணாநிதி மன்மோகன்சிங்கிற்குக் கடிதம்

(சென்னை)

தமிழக கடலோரப் பகுதிகளில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் கடன்களை இரத்துச் செய்ய வேண்டும் என்று பிரதமருக்கு கருணாநிதி அவசர கடிதம் எழுதியுள்ளார்.

அதில் கருணாநிதி எழுதியிருப்பதாவது; சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளைப் பார்வையிட தாங்கள் தமிழகத்திற்கு வந்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகத்தின் அனைத்துக் கடலோரப் பகுதிகளும் சுனாமி அலையின் பேரழிவால் பாதிக்கப்பட்டுள்ளன. என்பதையும் மீனவர் சமுதாயத்தினர் தான் பெரும்பாலும் இன்னுயிர்களை ஈந்துள்ளனர். என்பதையும் தாங்கள் உணர்ந்து அவர்கள் ஏற்கனவே பெற்ற கடனை இரத்துச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன் எனக் குறிக்கப்பட்டுள்ளார்.

# பயணிகள் வாகன விற்பனை இந்தியாவில் பத்து இலட்சத்தைத் தாண்டியது

(புதுடில்லி)

இந்தியாவில் கடந்த 2004 ஆம் ஆண்டில் பயணிகள் வாகனங்கள் விற்பனை 10 இலட்சத்தைத் தாண்டி விட்டது. உள்ளூர் வாகனத்தயாரிப்பு நிறுவனங்கள் வெளிநாடுகளில் தங்கள் காலடியைப் பதித்துள்ளனர். அதே நேரத்தில் வெளிநாட்டு வாகனத்தயாரிப்பு நிறுவனங்கள் இந்தியாவில் தங்களது ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி மையத்தை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளன.

கடந்த 2004ஆம் ஆண்டில் வாகன விற்பனையில் தேக்க நிலை ஏற்படும் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் யாரும் எதிர்பார்க்காத வகையில் வாகன விற்பனை இந்த ஆண்டில்தான் உச்சத்தை எட்டியது. நடுத்தர வர்க்க மக்களின் வருவாய் உயர்வு, குறைந்த வட்டியுடன் அறிவிக்கப்பட்ட கவர்ச்சிகரமான கடன் திட்டங்கள், பண்டிகைக் காலங்களில் வாகன விற்பனையில் ஏற்பட்ட உயர்வு ஆகியவையே 2004 ஆம் ஆண்டில் எதிர்பாராத புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. இது தவிர நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியும் உயர்வு கண்டதாலும் இந்த நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த 2003ஆம் ஆண்டில் 8 இலட்சத்து 40 ஆயிரம் பயணிகள் வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டன. இது 2004ஆம் ஆண்டில் 10 இலட்சம் வாகனங்களாக உயர்ந்துள்ளது. கார் உற்பத்தியாளர்கள் 35 புதிய மால்களை அறிமுகப்படுத்தியுள்ளனர். சர்வதேச அளவில் உருக்கின் விலை அதிகரிப்பு இருந்தாலும் முன்னணிக்கார்த் தயாரிப்பாளர்களான மாருதி, போர்டு போன்ற நிறுவனங்கள் தங்களின் சில மாடல் கார்களின் விலையைக் குறைத்தன. எனினும் மத்திய வரவுசெலவுத்திட்டத்தில் கல்விக்கு 2 சதவீதம் வரி போட்டபின் அனைத்து வாகனத் தயாரிப்பாளர்களும் தங்கள் வாகனங்களின் விலையை உயர்த்தினர்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ஹுண்டாய் மற்றும் மாருதி நிறுவனங்கள் 3 நாட்களுக்கு விசேட தள்ளுபடி விலைகளை அறிவித்தன. இதனால் இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் தலா 27 ஆயிரம் கார்களுக்கான புதிய பதிவுகள் பெற்றன.

ஜப்பானின் முன்னணி வாகனத் தயாரிப்பு நிறுவனமான சுசுகி இந்தியாவில் இரண்டு திட்டங்களை மேற்கொள்ள ஆயிரத்து 50 கோடிரூபாய் ஒதுக்கியுள்ளது. இந்தியாவில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி மையங்கள் தொடங்க சுசுகி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

# இந்தியாவில் உ.உற்பத்தி வளர்ச்சி 2004 — 05 இல் 6.5 வீதமாக இருக்கும்

நடப்பாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 6.5 சதவீதமாக இருக்கும் எனப்பெரும்பாலான இந்திய நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன.

நடப்பு நிதி ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 7 சதவீதத்தை எட்டும் என மத்திய அரசு எதிர்பார்க்கின்றது. இந்த நிலையில்இது பற்றி இந்திய தொழில் சம்மேளனம் ஆய்வு நடத்தியது. பல்வேறு தொழிற்சாலைகளில் தலைமை நிர்வாக இயக்குனராக இருக்கும் அதிகாரிகளிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வில கிடைத்த விபரங்கள் வருமாறு நடப்பு 2004- 2005ஆம் ஆண் டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 6 முதல் 6.5 சதவீதமாக இருக்கும் என்று 57.5 சதவீதம் பேர் நம்பிக்கை தெரிவித்தனர். ஆனால் 6முதல் 7 சதவீதம் வரை உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி அதிகரிக்கும் என 31.8 சதவீதத்தினர் தெரிவித்துள்ளனர்.

வரும் 2005-2006ஆம் ஆண்டில் 6முதல் 6.5 சதவீதம் வரை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி இருக்கும் என்று 26.5 சதவீதத்தினரும், 6முதல 7 சதவீதமாக இருக்கும் என 37.5 சதவீதத்தினரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். பணவீக்கத்தைப் பொறுத்தவரை 2005-2006ஆம் ஆண்டில் 7முதல் 8சதவீதமாக இருக்கும் என 31.42 பேரும், 6முதல் 7சத வீதமாக இருக்கும் என்று 38.57 சதவீதத்தினரும் கருத்துத் தெரிவித்தனர் இவ்வாறு அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.


## வீரவணக்கம்

பிறப்பு 26 06 1952



வீரச்சாவு 26 12 2004

**துணைப்படை வீரர் கப்டன் மகாலிங்கம்**

**(இராஜப்பன் மகாலிங்கம்(பெற்றோல் ஐயா)**

**ஆதி கோயிலடி வல்வெட்டித்துறை**

தாயக மண்ணினை மீட்பதற்காக
தலைவன் அணியில் சேர்ந்து
தரணியில் நாமெல்லாம்-தலைநிமிர்ந்து
வாழ வழிசமைத்து
கடல் அன்னையின் சீற்றத்தால்
கண்ணிமைக்கும் நேரத்தில்
தாய் மண்ணில் வித்தாகி
போன உங்களின் கனவு
நிச்சயம் ஓர் நாள் நனவாகும்.

தகவல்:
கடற்புலிப்போராளிகள்


(5525)


## இளம் அரசியல் வாதிகளுக்கு காங். கோடுக்கின்றது பயிற்சி

காங்கிரசில் உள்ள இளம் அரசியல்வாதிகளுக்கு இரண்டு நாள் பயிற்சி முகாம் நடக்கவுள்ளது.

இது குறித்து உத்தரப் பிரதேச மாநில காங். தலைவர் சல்மான் குர்ஜித் கூறுகையில் "மாநிலத்தில் உள்ள சித்திரகுட் என்ற இடத்தில் காங்கிரசில் உள்ள இளம் அரசியல வாதிகளுக்கு பயிற்சி முகாம் நடத்தப்படுகின்றது. இரண்டு நாள் நடக்கும் இந்த பயிற்சி முகாம் வரும் 17ஆம் திகதி தொடங்குகின்றது. ராகுல்காந்தி உட்பட இளம் எம்பிக்கள் அனைவரும் இதில் பங்கேற்பர். இந்தப் பயிற்சி முகாமில் மூத்த தலைவர்கள் பல்வேறு ஆலோசனைகள் வழங்குவர் 3 மாநிலங்களில் நடக்கும் சட்டசபை தேர்தலுக்குப் பிறகு காங். தலைவர் சோனியா உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு வருவார்" என்றார்.


## கண்ணீர் அஞ்சலி



**அமரர் திருமதி ஜெயசுதன் சிவமதி**

(சட்டவாளர் மாவட்ட மேல் நீதிமன்றம், கிளிநொச்சி)
உடுத்துறை மருதங்கேணி

பிறப்பு 18 - 06 - 1976
இறப்பு 26 - 12 - 2004

26.12.2004 அன்று இயற்கை அனர்த்தத்தால் சாவைத் தழுவியவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

முகவரி:
தம்பகாமம்,
பளை. (5527)

தகவல்
ஜெயசுதன்
(கணவன்)



## கண்ணீர் அஞ்சலி



**அமரர் செல்லக்கண்டு தங்கமணி**

உடுத்துறை வடக்கு,
மருதங்கேணி

பிறப்பு 11 - 03 - 1935
இறப்பு 26 - 12 - 2004

26.12.2004 அன்று இயற்கை அனர்த்தத்தால் சாவைத் தழுவியவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

முகவரி:
தம்பகாமம்,
பளை. (5527)

தகவல்
க.மகேந்திரன்

# புதுக்காட்டுச்சந்தி செயலணி அலுவலகமூடாக உதவிப் பொருட்களை வழங்கியோர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

**கடற்புவிநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்களுக்கு உதவும் முகமாக பெருமளவான தமிழ் உறவுகள் உதவிப்பொருட்களை, புதுக்காட்டுச்சந்தியில் அமைக்கப்பட்டுள்ள செயலணிக்குழு அலுவலகம் ஊடாக வழங்கிவருகின்றனர்.**

இவ்வாறு உதவிப் பொருட்களை வழங்கியவர்களின் விபரங்களை புதுக்காட்டுச்சந்தி செயலணி வெளியிட்டுள்ளது.

இதன்படி கடந்த 28ஆம் திகதி உதவி வழங்கியவர்களின் விபரம் அமுதம் உணவகம்-கிளி, கே.ட. ஆர்.ஓ இணையம் கிளி, காந்திக் கிராம மக்கள் கோணாவில், உருத்திரபுரம் இளைஞர் சங்கம், கிளி, திருச்சபை கருணாநிலையம் கிளி, அலுமினியத் தொழிற்சாலை உரும்பிராய், தமிழர்புனர்வாழ்வுக் கழகம் நடுவப்பணியகம், சோமசுந்தரம் மிருசுவில், குமரன் விளையாட்டுக்கழகம் கைதடி, கிராம அபிவிருத்திச் சங்கம் புத்தூர், சங்குவேலிக் கிராம மக்கள், கலைஒளி சனசமுகநிலையம் சிறுப்பிட்டி, மூவிமென்டோ யாழ், ஞானவைரவர் சனசமுக நிலையம் கந்தரோடை, க.கானகன் கண்காணிப்பாளர், தமிழீழக்குற்றப் புலனாய்வுத்துறை, க.கிருபாகரன் பத்தமேனி, க.கிருஸ்ணபவன் தேசிய சேமிப்பு வங்கி யாழ். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தம்பசிட்டி, இந்து இளைஞர் மன்றம், மூளாய், வர்த்தகர் சங்கம் யாழ். கோப்பாய்கிராமமக்கள், சிறிமுருகன் சனசமுகநிலையம் நெல்லியடி, வளர்மதி விளையாட்டுக்கழகம் மூளாய், கல்வாரி பூரணசுவி ஷேசதேவாலயம் கொக்குவில், ஆலய பரிபாலனசபை கைதடி, பிறேம்குமார்-மாகிவான் சந்தி, நீர்வேலி, பொதுமக்கள் ஆனைக்கோட்டை, ஊனமுற்றோர் சங்கம் கிளி இந்துக் கல்லூரி மானிப்பாய், வாலிபர்கள், ஆரியகுளம் செஞ்சிலுவைச்சங்கம் மல்லாவி, சிவாகளஞ்சியம், பளை, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பொதுமக்கள் அமைப்பு மன்னார், பொதுமக்கள் மாதியாவ கண்டி ஆகியோர் 28ஆம் திகதி வழங்கியுள்ளனர்.

29ஆம் திகதி பொருட்கள் வழங்கியவர்கள்,

தமிழர்புனர்வாழ்வுக்கழகம் கிளி. மக்கள் மன்றம் வதிரி நெல்லியடி, தானஸ்ன் கம்பனி லிமிட்டட் யாழ், செலிங்கோ வீட்டுக்கடன் கம்பனி லிமிட்டட் யாழ், கெயர் கிளி, வலயக கல்விப்பணிப்பாளர் பணிமனை கிளி, கலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கச்சாய், புனித மைக்கல் இளைஞர்கழகம் உரும்பிராய், இல.செஞ்சிலுவைச்சங்கம் மல்லாவி, அம்பிகா ஒன்றியம் கெருடாவில், பொதுமக்கள் மடத்தடி துறையாமூலை, கெயர் கிளி, வளர்மதி சனசமூகநிலையம் மட்டுவில் தெற்கு, பல்கலைக்கழக மாணவர்கள் யாழ், யு.என்.எச்.சீ.ஆர். கிளி, சாரதிகள் சங்கம், வர்த்தகர் சங்கம் டிக்கோயா நுவரெலியா.

ஜீ.ரீ.சற் வவுனியா, பொதுமக்கள் இணுவில் கிழக்கு, தேசிய எழுச்சிப் பேரவையும், மக்களும் பூநகரி, கிளி முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலனசபை டெல்த்தோட்ட கண்டி, பட்டதாரி பயிலுனர் கமநல சேவை புத்தூர், மன்னார் மாவட்ட மக்கள் நலன்கருது சங்கம் மாதளைலண்டன் வன்னி மாவட்ட சர்வோதயம்.

30ஆம் திகதி பொருட்கள் வழங்கியவர்கள் விபரம்.

ஆனைக்கோட்டை விளையாட்டுக்கழகம் ஜீ. ரி.சற் வவுனியா, பொதுமக்கள் இணுவில், கிளி. முத்துமாரியம்மன் ஆலயம், டெல்த்தோட்டம் பட்டதாரிப்பயிலுனர், புத்தூர், நலன்கருது சங்கம் மாதகல், மந்துவில் பொது மக்கள், சிறுவர் பாதுகாப்பு நிதியம் கிளி, செல்லையா பாலகிஷ்ணன் தெஹிவளை, கோவிற்கடைவை மக்கள் அமைப்பு துன்னாலை, செஞ்சிலுவைச்சங்க ஊழியர்கள் மல்லாவி, பொதுமக்கள் ஒன்றியம் நாவற்காடு, வேட்விசன், உதயன் பத்திரிகை நிறுவனம், யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழகம், யாழ். முத்தையா சேனாதிராஜா அராலி, தேசியக்கல்வியற்கல்லூரி யாழ், காந்தி சனசமூக நிலையம் அராலி, போரூட் வன்னி, சிக்கனக்கடன் கூட்டுறவுச்சங்கம் வறக்கப்பொல, கல்கமுவா கேகாலை, வள்ளுவர் சனசமுக நிலையம் மாரியவாக் கண்டி, வலயக்கல்விப் பணிப்பாளர் வடமராட்சி, அம்பிகா ஒன்றியம் கெருடாவில், கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், கச்சாய் புனிதமைக்கோல் இளைஞர் கழகம், உரும்பிராய் மடத்தடி மக்கள், மந்திகை அரசியற்துறை வடமராட்சி, வளர்மதி சனசமூக நிலையம் மட்டுவில், யு.என்.எச்.சி.ஆர். கிளி.

31ஆம் திகதி பொருள் வழங்கிய வர்கள்

மார்க்கண்டு சிவேந்திரன் 25B களுபோவல, தெஹிவளை, யாழ்.பல்கலை மாணவர்கள், யு.என்.எச்.சி.ஆர் சாரதிகள், வர்த்தகசங்கம், டிக்கோயா, நுவரெலியா மக்கள் முன்னணி இரத்தினபுரி, இளைஞர் சமூகம், கந்தப்பளை நுவரெலியா, பொதுமக்கள் (மலையக மக்கள் முன்னணி) ,கண்டி கதிரேசன் கோயில் நிர்வாக சபை, மாவ நல்லை ஐயனார் கோயில், பரிபாலன சங்கம், 4ஆம் கட்டை வேம்பங்கொட்டு புத்தூர் தமிழ் மக்கள், மாத்தளை, கண்டி பொதுமக்கள், சபுகஸ் கந்தா இரத்தினபுரி அற்புதரா ஜாவசந்த கலா தொட்டலை வீதி தெஹிவளை ஐயனார்கோயில் பரிபாலன சபை நாத்தாண்டியா சிலாபம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம் யாழ், ரீ.தங்கராசா வடகிழக்கு மாகாண செயலாளர், திருமலை, இந்து இளைஞர் சங்கம் கந்தப்பளை நுவரெலியா மீனவர் வணிகர் சங்கம், கிளி பொதுமக்கள் அமைப்பு கோண்டாவில், தங்கம்மா புடைவையகம் கிளி, செல்வி இராசநாயகம் ஜெசிந்தா, அரசஅதிபர் கிளி. ஆகியோர் கடந்த 28ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தம்மாலான அவசர உதவிகளை வழங்கினர். தொடர்ந்து உதவுபவர்களின் விபரம் தொடர்ந்து வெளியிடப்படும். (லோ.தீ)

## தவிர்க்க கோரிக்கை

யாழ் குடா நாட்டு மக்கள் தமது உணவுத் தேவைகளுக்காக கடல் உணவுகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ சகாதார சேவையினர் அறிவித்துள்ளனர்.

சுனாமி கடல் பேரலையின் தாக்கத்தால் கடல் நீருடன் மனித உடலுக்கு ஒத்துவராத இரசாயன கனிமங்கள் உட்பட பல நஞ்சுப் பதார்த்தங்கள் வடபகுதிக் கடல் நீருடன் கலந்துள்ளது.

இவ்வாறான அசாதாரண நிலையில் உள்ள கடல் நீரிலில் வாழும் கடல் உயிரினங்களில் இந்த நஞ்சுப் பொருட்களும் கடலடி இரசாயனங்களும் சேர்ந்திருக்கச் சாத்தியமுள்ளதால் இவ்வாறான கடல் உயிரினங்களை உண்பதால் மக்களிடையே பல்வேறு நோய்கள் தோன்றும் அபாயமுள்ளதாகச் சுட்டிக் காட்டியே தமிழீழ சுகாதாரசேவையினர் அவ் அறிவித்தலை விடுத்துள்ளனர்.

## வீதி திருத்த நடவடிக்கை

கடந்த 25 வருடங்களாக புனரமைக்கப்படாமலும் கடந்த கால போர் நடவடிக்கையால் கனரக இராணுவ வாகனங்களால் சிதைந்து போயுள்ள மந்துவில் சந்திரன் கேணி வீதி உடனடியாக புனரமைக்க முதல் கட்ட நடவடிக்கையைத் தொடங்கி இருப்பதாக மந்துவில் மேற்கு கிராம அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. மக்களின் ஒத்துழைப்புடன் இவ்வீதி திருத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# 'சுனாமி' பேரலையால் பாதிக்கப்பட்ட யாழ்.மக்களுக்கு உதவ பிரான்ஸ் வைத்தியர்

(யாழ்ப்பாணம்)

"சுனாமி" கடற்பேரலையால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேச வாழ்மக்களுக்கான மருத்துவ மற்றும் சுகாதார சேவைகளை வழங்க பிரான்ஸ அரசு முன்வந்துள்ளது.

அந்தவகையில் உடனடியாகவே சுனாமி அலைத்தாக்கத்தில் சிக்கி காயமடைந்தோருக்கான சிகிச்சைகளை வழங்க 16 பேர் கொண்ட வைத்திய நிபுணர் குழு ஒன்றை அனுப்பி வைத்துள்ள பிரான்ஸ் அரசாங்கம் ஒரு தொகுதி மருந்துப் பொருட்களையும், பிரான்ஸ் நாட்டு சுகாதார நிபுணர்கள் குழு ஒன்றையும் யாழ்.குடாநாட்டிற்கு அனுப்பி வைக்கவுள்ளது.

யாழ்.குடாநாட்டைத் தாக்கிய சுனாமி அலையின் தாக்கத்தால் ஏராளமானோர் காயமடைந்திருப்பதுடன் அலை தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதாரப் பிரச்சினைகளும் நிலவுகிறது.

எனினும் இவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு துரிதப்படுத்தாமையைத் தொடர்ந்தே பிரான்ஸ் இவ் உதவியை வழங்க முன்வந்துள்ளது. (33)

## —யாழ். இல் வைத்தியசாலைகளில் தங்கியுள்ள— நோயாளர்களுக்கு பால்மா, படுக்கைவிரிப்பு வழங்க த.பு.கழகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் மந்திகை வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு படுக்கை விரிப்புக்களையும், பால்மாக்களையும் வழங்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. "சுனாமி" பேரலையின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு யாழ். போதனாவைத்தியசாலை மற்றும் மந்திகை வைத்தியசாலை ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் காயமடைந்த பெரியவர்கள் ஆகியோரது தேவைகளைப் பூர்த்திசெய்ய பால்மா வகைகள், படுக்கைவிரிப்புகள் என்பன தேவைப்படுவதாகக் கோரிக்கை விடுக்கப்பட்டதையடுத்தே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. (33)

# இராணுவ கனரக வாகன தொடரணியால் ஏ-9 வீதியில் பாலம் சேதம்

(தென்மராட்சி)

கொடிகாமம் கோயிலாமனை ஏ.9 பிரதான சாலையில் உள்ள பாலம் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னால் இரவு நேரத்தில் தொடர்ந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தின் கவச வாகனத் தொடரணில் சேதமடைந்துள்ளது.

இப்பாலத்தின் நடுப்பகுதியில் பாரிய உடைப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது இப்பாலம் உடனடியாக சீர் செய்யப்படாமல் விட்டால் விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் இருப்பதுடன் விபத்துக்கள் நடப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். தற்பொழுது உடைபட்டுள்ள பாலத்தின் வெட்டைகள், தற்காலிகமாகத் தார் ஊற்றி உள்ளதுடன் சாலையின் மையப் பகுதியில் தார்ப் பெரல் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. (28)

# யாழ்.இல் மருத்துவ சேவை வழங்க கொரிய மருத்துவக்குழு

சுனாமி கடற்பேரலையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டு கரையோரப் பகுதிவாழ் மக்களின் மருத்துவதேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உதவிகளை வழங்க கொரியா முன்வந்துள்ளது. அந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களின் மருத்துவதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இரண்டு சரக்கு விமானங்கள் நிரம்பிய மருந்துப்பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்துள்ள கொரிய அரசு 40 பேர் கொண்ட வைத்திய நிபுணர்கள் குழு ஒன்றையும் யாழ்ப்பாணத்திற்கு உடனடியாகவே அனுப்பிவைத்துள்ளது (33)

# மீளக்குடியேறிய மக்களுக்கு இதுவரை நிவாரணமில்லை

## -பருத்தித்துறை மக்கள் குற்றச்சாட்டு

(வடமராட்சி)

சுனாமி கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தின் வடமராட்சி கரையோரப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களிற்கு எந்தவொரு உதவியும் கிட்டவில்லையென குற்றஞ் சாட்டப்படுகின்றது. பெரும் பாலும் முகாம்களில் தங்கியுள்ளோரிற்கு மட்டுமே இவ்வுதவிகள் கிட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றன..

இவ்வாறான குற்றச்சாட்டுகளை எழுப்பும் சுலோக அட்டைகள் பருத்தித்துறை முனைப் பகுதியில் அழிவுற்ற வீடுகளில் தொங்க விடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் மேலும் பிரஸ்தாபிக்கையில், "பருத்தித்துறை, முனைப் பகுதி கடந்த கடல் கொந்தளிப்பினால் பெரும் சேதங்களிற்குள்ளாகியுள்ளது. வீடுகள் முற்றாகவும் பகுதியாகவும் அழிந்துள்ளன. மீன்பிடி வலைகள் மற்றும் வள்ளங்கள் அழிந்துள்ளன. இந்நிலையில் பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்திருந்த பல குடும்பங்களும் தமது எஞ்சிய உடமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் மீளக்குடியமர்ந்துள்ளன.

எனினும் அவ்வாறு மீளக் குடியேறிய குடும்பங்கள் அனைத்தும் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ள நிலையில் அரசினதோ அல்லது உள்ளூர் தொண்டரமைப்புக்களினதோ உதவிகள் ஏதும் கிட்டியிருக்கவில்லை" என தெரிவிக்கின்றன.



இதையடுத்தே அவலங்களை பார்வையிட வரும் அரச அதிகாரிகள் மற்றும் உள்ளூர் சர்வதேச தொண்டரமைப்பின் பிரதிநிதிகள் தங்களது அவலங்களைப் பார்வையிடுவதற்கேதுவாக கோரிக்கைகள் அடங்கிய சுலோகங்களை உடைந்த தமது வீடுகளிற்கு முன்னால் காட்சிக்கு வைத்து தமது எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றனர்.

# அம்பாறையில் ஆறு மருத்துவமனைகள் 'சுனாமி'யால் அடித்துச் செல்லப்பட்டன!

## - மருத்துவ சேவைகள் பெரும் பாதிப்பு

(அம்பாறை)

**அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் 'சுனாமி' கடல் அலையால் ஆறு மருத்துவமனைகள் முற்றாகச் சேதமடைந்துள்ள தாக கரையோரப்பிரதேச சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஏ.எல்.எம். நஸீர் தெரிவித்துள்ளார்.**

அவர் மருத்துவமனைகள் தொடர்பாக மேலும் கூறும்போது அழி வுற்ற மருத்துவமனைகள் நான்கு தற்காலிக இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன. இதேவேளை மற் றைய இரண்டு வைத்தியசாலை களையும் அமைப்பதற்கான இடங் கள் தேடப்பட்டு வருவதாகவும் கூறினார்.

அத்துடன் ஆட்பற்றாக்குறை பெருமளவில் உள்ளதாகவும் இருபத்தைந்து சதவீதமான ஊழி யர்களே தற்போது வேலைக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இம் மருத்துவமனையில் பணி யாற்றி வந்த ஏனைய ஊழியர்கள் இந்தக் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டவர்களாகவோ அன்றி உறவுகளை இழந்தவர்களாகவோ இருக்கின்றனர்.எனவே நாங்கள் வேறு பிரதேசங்களில் இருந்து ஊழியர்களை தருமாறு கேட்டுள் ளோம். அவர்களில் சிலரை சேவை யில் அமர்த்தியும் உள்ளோம். இதேவேளை மருத்துவப் பொருட் கள் மற்றும் நுளம்பு வலை போன்ற வற்றிக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது என்றார் அவர்.

# புகுமுக மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை பிற்போடல்

(செட்டிகுளம்)

வவுனியா கல்வியற் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த புகுமுக மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா கல்வியற் கல்லூரி பீடாதிபதி தெரிவித்துள்ளார். இதேவேளை வவுனியா கல்வியற்கல்லூரியிலிருந்து மட்டுஅம்பாறை மாவட்டங்களுக்குச் சென்ற மாணவர்களை உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். (21)

# திரட்டப்பட்ட உதவிப்பொருட்கள் அரச ஊழியர்களால் அபகரிப்பு!

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவென வாழைச் சேனை பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்கள் அங்கு கடமையாற்றும் அலுவலகர்களினால் அவர்களது சொந்தப் பாவனைக்கு கொண்டு செல்லப்படுவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு கண்துடைப்பு நடவடிக்கையாக சிறிதளவு பொருட்களை மட்டும் வழங்கி விட்டு ஏனைய அனைத்துப் பொருட்களையும் வாழைச்சேனை பிரதேச செயலகத்தின் ஊழியர்களும், அவர்களது உறவினர்களும் பகிர்ந்து கொண்டதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

# கடற்கொந்தளிப்பால் பாதிப்புற்றோருக்கு நெஸ்லே மற்றும் நெஸ்பிறே நிறுவனம் உதவி

(அலுவலகசெய்தியாளர்)

கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வாழும் வடமராட்சி கிழக்கு மக்களுக்கான பால்,பால்மா, உணவுப் பொருட்களை நெஸ்லே மற்றும் நெஸ்பிறே நிறுவனம் வழங்கியுள்ளது.



வடமராட்சி கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து பத்துக்கும் அதிகமான நலன்புரி நிலையங்களில் வாழ்ந்துவரும் சிறுவர்களுக்கு நெஸ்லே பால் பைகள் 16380 நெஸ்பிறே மா 4009 பைகள், மகிநூல்டிஸ் சமைத்த உணவு 38700 பேருக்கும் செயலணி ஊடாக வழங்கியுள்ளது. இதே வேளை இப்பொருட்கள் முல்லை மாவட்டத்தில் இடம் பெயர்ந்து நலன் புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கும் வழங்கப்பட உள்ளதாகவும் நிறுவன வடபிராந்திய முகாமையாளர் கி.ரவீந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பொருட்கள் கிளி நொச்சியில் உள்ள அம்மன் களஞ்சியம் ஊடாகவே வழங்கப்படுகிறது. மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீர்வசதிகளை வழங்குவதற்காக 9000 லீற்றர் நீர்த்தாங்கி ஒன்றையும் தமிழர் புனர்வாழ்வுக்கழக வவுனியா மாவட்டச் செயலகத்தில் தாம் கையளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (லோ,தீ)

# தாயகத்தில் இயற்கை அனர்த்தத்தால் நிர்க்கதியானோருக்கு சுவிஸ் வாழ் தமிழீழ தமிழர்கள் ஒன்று கூடி உதவியளிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

*01.01.2005* சனிக்கிழமை அன்று தமிழீழ விடுதலைப்புலிகள் சுவிஸ் கிளையினரால் நடாத்தப்படவிருந்த புத்தாண்டின் புதிய மகிழ்வு எனும் நிகழ்வு தென்கிழக்காசிய நாடுக ளில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத் தால் மாற்றப்பட்டு புத்தாண்டின் துயர் சுமந்த நினைவு கூரல் நிகழ்வு நடாத்தப்பட்டது.

தேசிய மாவீரர் நாள் நிகழ்வு நடைபெறும் Fribourg மாநிலத்தில் உள்ள Forum மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

போரும் இடப்பெயர்வும் அவ லத்தை ஏற்படுத்தினாலும் தாம் வாழ்ந்த சொந்த மண்ணிலே வாழத்துடித்த எமது இனத்தின் வாழ்க்கையை இயற்கை அழித்து நிர்க்கதியாக்கியுள்ள இந்நிலையில் எம்மை விட்டுப் பிரிந்த உறவுக ளுக்கு கண்ணீர்ப்பூக்களை காணிக் கையாக்கவும் நிர்க்கதியாகி துயரத் தின் நடுவே நிற்கும் மண்ணின் உறவுகளின் மறுவாழ்வுக்கு சுவிஸ்வாழ் தமிழீழ மக்கள் என் றும் உறுதுணையாக நிற்போம் என்பதனை எடுத்துக்காட்டவும் மண்டபம் நிறைந்திருந்த 2500 வரையான மக்களுடன் 3.30இற்கு ஆரம்பமான இந்நிகழ்வில் தாயகத் தில் 'சுனாமி' பேரலையினால் மரணித்த மக்களின் நினைவாக விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் குலம் நினை வுச் சுடரினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து தாயகத்தில் இயற்கை யின் அனர்த்தத்தால் பலியான மக்களிற்காக அகவணக்கம் நடைபெற்றதோடு தாயகத்தில் பேரலைக்குப் பலியான மக்களின் நினைவாக பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த நினைவு மேடையில் மலர்வணக்கம் செலுத் தப்பட்டது. கூடியிருந்த மக்கள் அனைவரும் ஏற்கனவே அவர்க ளுக்கு வழங்கப்பட்ட கறுப்புப்பட் டியை அணிந்து கொண்டு உணர்வு பூர்வமாக இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

டச்சு, பிரெஞ்சு, இத்தாலி மொழிகளில் சுவிசிலுள்ள ஊடகங் கள், சுவிஸ்பிரஜைகள் மற்றும் வெளிநாட்டவர்களிற்கு சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பினர் நன்றிகளைத் தெரிவித்தனர். தொடர்ந்து தமிழ்த் தொலைக் காட்சி இணையத்தினராலும் நிதர்சன பிரிவினராலும் ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்ட இயற்கை யின் கோரக்காட்சிகள் மண்டபத் தில் அகன்ற திரையில் காண்பிக் கப்பட்டன. துயரின் நடுவில் கூடியிருந்த மக்களின் மனதை உருக்கும் முகமாக இக்காட்சிகள் அமைந்திருந்தன. கவிஞர் அறிவுமதி தனது உணர்வுகளைக் கவிதை மூலம் தொலைபேசி ஊடாகப் பகிர்ந்து கொண்டார்.

சுவிஸ் பிரெஞ்சு சங்கங்களின் தலைவரும்,சுவிஸ் பிரெஞ்சு மக்க ளின் பிரதிநிதியும், உலக பிரெஞ்சு சங்கங்களின் பிரதிநிதியும் வோ மாநில வெளிநாட்டவர்களுக்கான ஆலோசனைக்குழு உப தலை வருமான யம்பர்கப்பலி தமிழ் மக்களின் துயரில்தானும் பங்கெ டுத்துக் கொள்வதாக தனது உரை யில் தெரிவித்தார். தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழக சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் சண்முக தாசன் உரையாற்றினார். அவரது உரையில் சுவிசிலுள்ள தமிழ் மக் கள் ஆற்றிய உதவிக்கு நன்றி களைத் தெரிவித்ததோடு தாயகத் தில் அல்லலுறும் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆற்றி வரும் பணியினை எடுத்துரைத்தார்.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் தனது உணர்வுகளைக் கவிதை மூலம் தொலைபேசி ஊடா கப் பகிர்ந்து கொண்டார். ஒளி வீச்சுப் பொறுப்பாளரும் போரா ளிக் கவிஞருமான வீரா துயர் சுமந்த தனது உரையை ஆற்றி யிருந்தார். தனது உரையில் தாயகத்தில் நடைபெற்ற துயரையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் போராளிகளும் மக்களுக்கு ஆற்றிய நிவாரணப் பணிகளையும் விளக்கமாக எடுத்து உரைத்தார்.

புலம் பெயர்ந்து வாழும் மக்கள் ஆற்றிய உதவிகளுக்கு நன்றிக ளைத் தெரிவித்ததோடு தொடர்ந்து ஆற்ற வேண்டிய பணிகளையும் எடுத்துரைத்த அவர், மேலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் அரசியல் ரீதியாகவும் புலனாய்வு ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கிருஸ்ணா அம்பல வாணர் கவிதையும் மேடை நிகழ் வாக நடைபெற்றது. மண்டப விளக் குகள் அணைக்கப்பட்டு கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தியவாறு தாயகத்தில் இயற்கை அனர்த் தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக் காக நிதி சேகரிக்கப்பட்டது.

சுவிஸ் தமிழ்இளையோர் அமைப்பு, உலகத்தமிழர் ஒருங்கி ணைப்புக்குழு கல்விச்சேவை என்பன தாயகத்தில் அல்லலுறும் மக்களின் நிவாரண நிதிக்காக சுவிஸ் மக்களிடம் பல வகையில் நிதி திரட்டியிருந்தன. சுவிஸ் இளையோர் அமைப்பு தாம் திரட்டிய நிதியினை தமிழீழ விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளைப்பொறுப்பாளர் குலத்திடம் ஒப்படைத்தனர். சுவிஸ் இளையோர் அமைப்பினரின் இச்சேவையைப் பாராட்டி அவர்களுக்கான கௌர வப்படுத்தல் நிகழ்வும் நடை பெற்றது. சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பு பொறுப்பாளர் மகிந்தன் தனது கருத்தைப் பகிர்ந்து கொண் டார். தொடர்ந்து மண்டபம் நிறைந்த மக்கள் தாயகத்தில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்க ளிற்கு தம்மாலான உதவிகளைத் தொடர்ந்து ஆற்றுவோம். என்ற உறுதி மொழியை வலது கரத்தை தமது நெஞ்சில் வைத்தபடி தெரிவித்தனர். சுவிஸ் நாட்டு ஊடக வியலாளர் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்ததோடு இந்நிகழ்வுகளை தமது புகைப்படக் கருவிகளுக்குள் பதிவாக்கியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (லோ,தீ)

# வடமராட்சி கிழக்கில் மீட்பு நடவடிக்கை கனரக வாகனங்கள் இன்மையால் பாதிப்பு

## – கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

கடற் பூகம்பத்தால் பாதிக்கப் பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதி களில் மீட்புப் பணிகளை மேற் கொள்வதற்கு கனரக வாகனங்கள் இல்லாமை பெரும் தடையாக இருப்பதாக வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகளில ஈடுபட்டு வரும் கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் தெரிவித்தார்.

மீட்புப் பணிநிலை தொடர்பாக அவரிடம் கேட்டபோதேஅவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; வடம ர்ாட்சி கிழக்கின் 40 கிலோமீற்றர் நீளத்திற்கும் அதிகமான அளவு தூரமான பகுதி ஒரு கிலோ மீற்றர் அகலத்தில் கடற் கொந்தளிப்பால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கட்டடங்கள்,பெருமரங்கள் உட்பட அனைத்தும் சிதைக்கப்பட்டுள்ளன. குடியிருப்புக்கள் எங்கே இருந்தது என்பதைக் கூட காண முடிய வில்லை. அந்த அளவுக்கு அனைத் துமே தரைமட்டமாக காட்சியளிக் கின்றது. இந்த நிலையில் இவற் றில் பல உடல்கள் சிக்குண்டு இருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. கடல் பெருக்கெடுப்பதை அறியாது வீடுகளில் இருந்த மக் கள் அப்படியே வீட்டுச் சுவர்கள் இடிந்த நிலையில் அதனுள் சிக்குண்டுள்ளனர்.இவர்களின் உடல்களை மீட்பதற்கு கனரக வாகனங்கள் போதாத நிலை காணப்படுகின்றது. விடுதலைப்புலி களின் இரண்டு புல்டோசர்கள் மாத்திரம் தான்உள்ளன. இவற் றைப் பயன்படுத்தி விரைவாக மீட்புப்பணிகளை மேற்கொள்ள முடியாத இடர்பாடுகள் ஏராளம் இவற்றை விரைவாக அகற்றி முடிப்பதற்கு ஏற்ற வகையில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் புல்டோசர்களை வழங்கினால் எமது மீட்புப் பணி வேகமாக நடை பெறும். மீட்புப் பணியில் தாமதம் ஏற்படுவதற்கு கனரக புல்டோசர் கள் பற்றாக்குறையே காரணம். விடுதலைப்புலிகளின் போராளிகள் தான் மீட்புப் பணியில் முழுமை யாக ஈடுபட்டுள்ளனர். அவர்களின் ஊக்கத்திற்கு ஏற்ப உபகரணங்கள் இல்லாமை தான் தாமதம் ஏற்படு கின்றது. பாதிக்கப்பட்ட பகுதி களுக்கு மீட்புப் பணியாளர்கள் செல்வதற்கு முடியாதவாறு வீதிகள் சேதமடைந்துள்ளன. பாரிய மரங்கள், கட்டட சிதைவுகளால் வீதிகள் துண்டிக்கப் பட்டுள்ளன. எனவே முதலில் வீதிகளைச் சீர்ப்படுத்த வேண்டும் அவ்வாறு சீர்ப்படுத்தினால் தான் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள விசேட குழுக்கள் தமது வேலையை விரைவாக மேற்கொள்ளமுடியும். இந்நிலையில் புல்டோசர்களின் தேவை அதிகமாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(லோ.தீ)

# நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள கர்ப்பிணிகள், குழந்தைகள் விபரம் திரட்டல்

(அலுவலக செய்தியாளர்)

கடல்புவிநடுக்கத்தால் பாதிக்கப் பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள கர்ப்பிணிப்பெண்கள், குழந்தைகள் தொடர்பான விபரம் புதுக்காட்டுச் சந்தியில் அமைந் துள்ள செயலணிக்குழு அலுவல கத்தில் திரட்டப்பட்டு வருகிறது.

வடமராட்சி கிழக்குப் பகுதி யில் இருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளிலும் உள்ள பாடசாலைகளிலும் பொதுக் கட்டடங்களிலும் தங்கியுள்ள கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் ஆகியோரின் விபரங்களை கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நடவடிக்கை களை மேற்கொள்ளும் செயலணிக் குழு செயலகத்தால் சேகரிக்கப் பட்டு வருகிறது.


இவ்வாறு முகாம்களில் தங்கி இருக்கின்றவர்களின் போசாக்கு மற்றும் வைத்தியத் தேவைகள் உட்பட அவர்களின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்கள் பற்றிய முழுவிபரமும் கிடைத்தவுடன் போசாக்கு, வைத்திய தேவைகள் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் செய லணிக்குழு அலுவலகப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(லோ,தீ)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்



## இடுக்கண் களைவதாம் நட்பு



இந்த நூற்றாண்டில் ஆயிரக் கணக்கான இன்னும் அதிகமாக லட்சக்கணக்கான உயிரிழப்புக்களை ஏற்படுத்திச் சென்ற படு பயங்கரம் இலங்கை, இந்தோனேசியா, இந்தியா என்று சுனாமி சுழலில் சிக்கி நிலைகுலைந்த தென்கிழக்கு ஆசியநாடுகளின் எண்ணிக்கை அதிகம்.

இயற்கைச் சீற்றங்கள் பேரழிவுகள் இவற்றை தடுக்கமுடியாது தான். ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் சோகங்களை பகிர்ந்து கொள்ள முடியும் தாராளமாக. இதற்கு எடுத்துக்காட்டாக உலக நாடுகள் நான்முந்தி நீமுந்தி என உதவிகளை சேகரித்து வருவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபங்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளது. இதனைவிட பொது அமைப்புக்கள் நிதியுதவிகளையும், உதவிப் பொருட்களையும் வாரி வழங்குகின்றன.

இதற்கும் மேலாக சுனாமி அலையால் பாதிக்கப்பட்டவர்களை அரவணைப்பதில் இம்முறை விளையாட்டுத்துறை ஒரு சேர கைகோர்த்துள்ளது. டென்னிஸ் கால்பந்து, கிரிக்கெட் உட்பட ஏறக்குறைய முன்னணி விளையாட்டு அமைப்புக்கள் அனைத்துமே வரிந்து கட்டிக் கொண்டு நிவாரணப் பணிகளில் முதல் ஆளாய் குதித்துவிட்டன. பெருந்தொகை வருவாயை ஈட்டித் தரும் மேற்படி விளையாட்டுக்களில் பெறப்படும் நிதி அனைத்தையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

விடயம் அறிந்தவுடனேயே ரஷ்யாவின் முன்னணி டென்னிஸ் நட்சத்திரம் மரியா ஷரபோவா, தாய்லாந்து பிரதமரிடம் ஐந்து இலட்சம் ரூபாயை வழங்கியதுடன் இன்னும் உதவத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். யாரும் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத ஒரு கொடிய விபரீதம் நடந்திருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதெல்லாம் வாழ்க்கை என்பது உறுதியற்ற விடயமாகிவிட்டது. இனிவரும் காலங்களில் நல்ல சம்பவங்கள் நிகழவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் எனத் தெரிவிக்கின்றார் ஷரபோவா.

கால்பந்து துறையை பொறுத்தவரை இந்தியாவின் முன்னணி அணிகளில் ஒன்றான மோகன் பகான் அணி சர்வதேசத்தில் பிரபலம் வாய்ந்த அணிகளை அழைத்து போட்டிகளை நடத்தி நிவாரணம் திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இதனைவிட சர்வதேச கிரிக்கெட் சபை மகாபோட்டித் தொடர்களை நடத்தி நிதி திரட்ட இறங்கியுள்ளது. இதற்கு அப்பால் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகள் தற்போது நடைபெற்று வரும் போட்டிகளில் கிடைக்கும் வருமானத்தை முழுவதுமாக வழங்க முன்வந்துள்ளன. இதற்கு ஒரு படிமேலாக கங்குலி தலைமையிலான இந்திய அணி பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முகமாக நிதி திரட்டுவதற்கு வீதியிலேயே இறங்கிவிட்டது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக இந்திய-பாகிஸ்தான், இலங்கை அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடத்தப்படலாம். இதற்காக எப்போது வேண்டுமென்றாலும் எங்கள் அணியை அனுப்புவதற்கு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதற்கு மேலாக இலங்கை அணியின் அதிரடி வீரர் சனத்ஜெயசூரியா அனர்த்தம் அறிந்து நியூசிலாந்து தொடரை ரத்து செய்து நாடு திரும்பியதும் தனது சொந்த இடமான மாத்தறையின் அழிவை பார்த்ததும் வேதனைப்பட்டதுடன் எனது சொந்தநிதி கொண்டேனும் மீண்டும் மாத்தறையை புதுப் பொலிவுடன் கட்டியெழுப்புவேன் எனத் தெரிவித்தார்.

பகையுணர்வு விருப்பு வெறுப்புகளை மறந்து ஆபத்து நேரங்களில் கைகொடுக்க முன்வரும் அவர்கள் முயற்சிக்கு பாராட்டுக்கள். இதுபோன்ற வேதனையான தருணங்களில் எவ்வளவுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு ஆறுதல் அளிப்பது மனித நேயம் கொண்டவர்கள் அனைவரதும் தார்மீகக் கடமையல்லவா? இல்லாது விடில் பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்பட்டு விடுவார்களல்லவா?

நேற்று வரை தொலைக் காட்சியிலும் நேரடியாகவும் கண்டு ரசித்த விளையாட்டு பிரபலங்கள் இன்று பாதிக்கப்பட்டோருக்கு கைகொடுத்து உதவ முன்வருவது உன்னதமான ஒரு அறிகுறியாகும். பாதிக்கப்பட்டோர் மனதுக்கு ஆறுதல் தைரியம் தன்னம்பிக்கை ஆகியவற்றை அளிக்கக் கூடிய மனிதாபிமான பணி தொடரட்டும். விளையாட்டு வீரர்களின் மனித நேய தொண்டு மகத்தானது இதற்கும் அப்பால் பேரழிவு தரும் இயற்கை சீற்றங்கள் இனி தொடராது இருக்க **எதிர்பார்ப்போம்**

---

## புதிய திசையில்...



உலக கிரிக்கெட் வரலாறு இரு நாடுகளுடன் ஆரம்பமாகியமை யாவரும் அறிந்ததே. ஒன்று தற்போதைய உலகசம்பியனாக தலை நிமிர்ந்து நிற்கும் அவுஸ்திரேலியா அடுத்தது தற்போது தலையெடுக்கத் தொடங்கியிருக்கும் இங்கிலாந்து ஆகும். இவ்விரு நாடுகளிலேயே கிரிக்கெட் தோன்றி வளர்ச்சி கண்டு ஏனைய நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்த வரை சம்பியனாக இருப்பினும், சென்ற ஆண்டு ஒரு சில டெஸ்ட் போட்டிகளில் தோல்வியைச் சந்தித்தது. எனினும் இங்கிலாந்து அணி கடந்த ஆண்டு எந்த ஒரு டெஸ்ட் போட்டியிலும் தோல்வியை சந்திக்காத பெருமையைப் பெற்றுள்ளது. இந்தத் தொடர் வெற்றி அதன் அதிர்ஷ்டம் என்று கூறிவிட முடியாது. காரணம் இதற்கு முன்பு வழிநடத்திய அணித்தலைவர்களைப் பொறுத்தளவில் மைக்கல்வோனின் தலைமைத்துவத்தின் கீழ் இந்த டெஸ்ட் வெற்றிகள் கிடைத்துள்ளன.

இறுதியாக 9 ஆவது தொடர் வெற்றியைப் பெற காலநிலைஇடம் கொடுக்காத நிலையில் தென்னாபிரிக்காவுடன் வெற்றிபெறாவிட்டாலும் தோல்வியிலிருந்து பாது காத்துக்கொண்டதுடன் போட்டியை சமன் செய்ய நேர்ந்தது.

2004 ஆம் ஆண்டு மார்ச்சில் இங்கிலாந்து அணி மேற்கிந்திய தீவுகள் அணியை எதிர்த்து ஆடி முதலாவது மங்கள வெற்றியைப் பெற்றது.மேற்கிந்தியத் தீவுகளுடனான முதல் போட்டியை 10 விக்கெட்டுகளாலும் இரண்டாவது டெஸ்ட் போட்டியை 7 விக்கெட்டுக்களாலும் மூன்றாவது போட்டியை 8 விக்கெட்டுகளாலும் வென்றது.

அடுத்ததாக பலமுள்ள அணிகளுள் ஒன்றான நியூசிலாந்து அணியை வென்றது. இவ்வாறு மேற்கிந்தியத்தீவுகள் அணியை தனது சொந்த மண்ணிலும் அதன் தாயகத்திலும் வெற்றி கண்டு தென்னாபிரிக்காவுடனான போட்டியில் தென்னாபிரிக்க மண்ணில் வென்று வந்துள்ளது.



இந்த வகையில் 2004 ஆம ஆண்டு இங்கிலாந்து அணிக்கு டெஸ்ட் போடடிகளில் திறமையும் அதிர்ஷ்டமும் சேர்ந்து கைகொடுத்ததில் தோல்வியைச் சந்திக்காத டெஸ்ட் அணி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

உண்மையில் மைக்கல் வோனின் வழிநடத்தலின் சிறப்பும் ரெஸ்கொதிக், பிளின்டொப், அன்ரு ஸ்ரோஸ் ஆகியோரின் துடுப்பாட்டமும் ஹார்மிசன், அஸ்லிஜைல்ஸ், ஹோகாட் போன்றோரின் பந்து வீச்சும் இந்த சாதனைக்கு வழி வகுத்தன.

இங்கிலாந்து வீரர்கள் இதே முறையில் தனது திறமைகளை வெளிக்காட்டும் பட்சத்தில் ஒரு நாள் போட்டிகளிலும் சிறப்பான அணியாக மிளிர்வதுடன் கிரிக்கெட்டில் செல்வம் கொழிக்கும் அவுஸ்திரேலிய அணியின் இடத்தைப் பெற்று கிரிக்கெட் வரலாற்று நாடு என்ற பெருமையையும் தக்க வைத்துக் கொள்வர்.


---

## தேடுதலில் பெக்காம் முன்னணி

கால்பந்து ரசிகர்களுக்கு டேவிட் பெக்காம் என்ற பெயரை அறிமுகம் செய்ய அவசியம் இருக்காது. இங்கிலாந்து கால்பந்து அணித்தலைவர். உலகின் தலைசிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவர். ரசிகர்கள் எண்ணிக்கையை விட ரசிகைகளின் எண்ணிக்கை அதிகமதிகம் கொண்டவர்.

ஆடை அணிகலன்கள் முதல் தலை முடியை வித்தியாசப் படுத்திக்கொள்வது வரை புதுப் புது போக்கை புகுத்துவதில் இளைஞர்களைப் பெரிதும் ஈர்ப்பவர்.

விளையாட்டு உலகில் கடந்த ஆண்டு மிக அதிகம் தேடப்பட்ட மனிதர் இவர் தான். இணையத் தளம் மூலம் 2004 ஆம் ஆண்டு அதிகம் தேடப்பட்டவர்கள் விபரம் சமீபத்தில் வெளியானது. விளையாட்டுப்பிரிவில் அதிகம் பேர் தேடிய பெயர் பெக்காம் மட்டுமே.




ரசிக ரசிகைகள் போட்டி போட்டுக் கொண்டு 2004 ஆம் ஆண்டு முழுவதும் இணையத்தளத்தில் பெக்காம் பற்றிய உடனடிச் செய்திகளை ஆர்வமாக ரசித்திருக்கிறார்கள். இதற்காக பெக்காம் அதிகம் சந்தோசப்பட முடியாது. காரணம் கடந்த ஆண்டில் அவரது சாதனைகள் அப்படி ஒன்றும் பிரமாதம் இல்லை. அவருக்குத் தற்போது கால்பந்துக்குள்ளேயும் வெளியேயும் ஏகப்பட்ட பிரச்சினைகளால் சிக்கித் தவிக்கிறார்.

# மாகாண சபையின் கீழ் பணியாற்ற நியமனம் பெற்ற பட்டதாரிகள் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு பயிற்சியில் இணைக்கப் பெற்று பெயர் விபரங்கள் கிடைக்கப் பெற்ற பட்டதாரிகள் மாகாண சபையின் கீழ் உள்ள சேவைகளிற்கு நியமிக்கப்பெற்றுள்ளனர். அவர்களைக் குறிக்கப்பட்டுள்ள திணைக்களங்களிற்கு சமுகமளிக்கும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். சேவையில் நியமிக்கப்பெற்றுள்ள பட்டதாரிகளின் பெயர் விபரம் கீழ் வருமாறு;

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - தர்மஞானசிங்கம் அஜந்தா முல்லை வீதி பரந்தன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - செல்வி சேனாதிராஜா கவிதா குமரபுரம் பரந்தன், கூட்டுறவுத் திணைக்கள உதவியாணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - செல்வரட்ணம் அகிலேஸ்வரன் தட்டுவன்கொட்டி ஆனையிறவு, கூட்டுறவு திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - சண்முகநாதன் ஜீவகன் தட்டுவன்கொட்டி ஆனையிறவு, கைத்தொழில் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - திருநாவுக்கரசு திசரூபன் 7ஆம் யுனிற் இராமநாதபுரம், பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடத் திணைக்களம் கிளிநொச்சி - தேவராஜா ஸ்ரீபன் றஞ்சித் பிரமந்தனாறு தருமபுரம்,

கிராம அபிவிருத்தித் திணைக்களம். வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - திருச்செல்வம் பிரபாகரன் கலவெட்டித்திடல் புளியம் பொக்கணை, கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - கருணானந்தசிவம் மகிந்தன் திருநகர் வடக்கு திருநகர், பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடத் திணைக்களம் கிளிநொச்சி - செல்வி சந்திரப்பிரியா சந்திரசேகரம் உருத்திரபுரம் கிளிநொச்சி, கைத்தொழில் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை- செல்வி. கயல்விழி முத்துக்குமாரு உருத்திரபுரம் கிளிநொச்சி, பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடத் திணைக்களம் கிளிநொச்சி கனகலிங்கம் ஞானராசா உருத்திரபுரம் கிளிநொச்சி,

விவசாயத் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - செல்வி ரம்யாதேவி செல்வரட்ணம் கண்டிவீதி கிளிநொச்சி, விவசாயத் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - செல்வி. அஜந்தாரூபி கந்தசாமி சேவிஸ்றோட் கிளிநொச்சி, கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - ஜெயரட்ணம் ஜெயச்சந்திரன் காந்திகிராமம் கோணாவில், காணி நிர்வாகத் திணைக்களம் வடக்கு கிழக்கு மாகாணம் திருகோணமலை - செல்வி. மொரின் ஜெயந்தா ஜஸ்ரின் கன்சஸ் 4ஆம் வட்டாரம் மண்டைதீவு, கைத்தொழில் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - சாந்தலிங்கம் விமலகுமார் கணேசபுரம் கிளிநொச்சி,

கைத்தொழில் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - செல்வி. யமுனா அருமைநாதன் 'சுகந்தபவனம்' கரடிப்போக்கு கிளிநொச்சி, விவசாயத் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - செல்வி கனேயினி கணேஸ் சில்வாவீதி வட்டக்கச்சி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - செல்வி. சந்திரவதனி கஜரோகனர் உருத்திரபுரம் கிளிநொச்சி, பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடத்திணைக்களம் கிளிநொச்சி. செல்வி. அப்பாப்பிள்ளை சோதிமலர் வன்னேரிக்குளம் கிளிநொச்சி, பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடத்திணைக்கம் கிளிநொச்சி -செல்வி. தர்சினி தனுஸ்கோடி ஆறுமுகம் வீதி வட்டக்கச்சி,

கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - செல்வி.கயல்விழி நடராஜா சில்வாவீதி வட்டக்கச்சி, பிரதம பொறியியலாளர் அலுவலகம் கட்டடத்திணைக்களம் கிளிநொச்சி - செல்வி. யாழினி பரமலிங்கம் ஆறுமுகம்வீதி, வட்டக்கச்சி, பிரதம பொறியியலாளர் அலவலகம் கட்டடத் திணைக்களம் கிளிநொச்சி - திருமதி சுதாகரன் பிரியதர்சினி கட்சன் வீதி வட்டக்கச்சி, கிராம அபிவிருத்தித் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - பத்மநாதன் பரமோதயன் சில்வாவீதி வட்டக்கச்சி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - திருமதி சுரேஸ்குமார் தரணி கணேசபுரம் கிளிநொச்சி,

கட்டட சமூக நலன் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - நெற்சிங்கம் சுரேஸ்குமார் கணேசபுரம் கிளிநொச்சி, விவசாயத் திணைக்களம் வடக்கு கிழக்கு மாகாணம் திருகோணமலை - செல்வராஜா திருவருட்செல்வன் கணேசபுரம் கிளிநொச்சி, கைத்தொழில் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - செல்வி.சிவரஜனி நடராஜா ஆனந்தபுரம் கிளிநொச்சி, விவசாயத்திணைக்களம் வடக்கு-கிழக்கு மாகாணம் திருகோணமலை - பரராஜலிங்கம் சுஜீவன் சில்வாவீதி வட்டக்கச்சி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - செல்வி கோபால கிருஸ்ணன் நந்தினி கந்தபுரம் கிளிநொச்சி,

கைத்தொழில் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - செல்வி சுகந்தினி நாகமுத்து கோணாவில் கிளிநொச்சி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி- கந்தசாமி சிவகுமார் உருத்திரபுரம் கிளிநொச்சி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி- நாகலிங்கம் ஜெயகரன் கனகபுரம் கிளிநொச்சி, விவசாயத் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை

சுந்தரலிங்கம் சுகந்தன் உதயநகர் மேற்கு கிளிநொச்சி, விவசாயத் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை- பசுபதிப்பிள்ளை சுரேந்திரன் உருத்திரபுரம் கிளிநொச்சி, கிராம அபிவிருத்தித் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - தோமஸ் விமலதாஸ் உருத்திரபுரம் கிளிநொச்சி,

காணி நிர்வாகத் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - பௌலினாமேரி ஸ்ரனிஸ்லஸ் கிளாலி எழுதுமட்டுவாள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - இராஜரட்ணம் அரவிந்தன் மட்டுவில் நாடு கிழக்கு பூநகரி, கைத்தொழில் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - செல்வி.ஜெயந்தினி திசநாதன் 4ஆம் கட்டை பூநகரி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - முருகுப்பிள்ளை முத்துக்குமரன் குடியிருப்பு ஜெயபுரம், கைத்தொழில் திணைக்களம் வடக்கு கிழக்கு மாகாணம் கிளிநொச்சி- திருநாவுக்கரசு யோகநாதன் கறுக்காய்த்தீவு பூநகரி,

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - விமலராணி பேரம்பலம் 4ஆம் கட்டை பூநகரி, கைத்தொழில் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணம் திருகோணமலை - செல்வி. கலாயினி வல்லிபுரநாதன் மட்டுவில் நாடு மேற்கு பூநகரி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி - சிவனேசன் ஆலங்கேணி பூநகரி. (சோ)

## –பாதிக்கப்பட்ட மக்களுக்காக– கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒரு மாத சம்பளத்தை வழங்கினார்

கடற் கொந்தளிப்பினால் ஏற்பட்ட சேதங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்1பினர் வினோநோகராதலிங்கம் தனது இம்மாதத்திற்குரிய சம்பளத்தினை பாதிக்கப்பட்ட மக்களிற்கென வழங்கியுள்ளார். இதனையொட்டி கடந்த 28ஆம் திகதி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வவுனியா அலுவலகத்தில் வைத்து டிசம்பர் மாதத்திற்குரிய சம்பளமான 22100 ரூபாவை வழங்கியுள்ளார். இதேவேளை வெள்ளவத்தையில் பொருட்கள் சேகரிக்கச்சென்ற பல்கலைக்கழக மாணவர்களிடம் அங்கிருந்த தமிழ்க்குடும்பம் ஒன்று தங்களுடைய சம்பளப் பணம் 35 ஆயிரம் ரூபாவை எடுத்து அப்படியே கொடுத்துள்ளார்கள் இவ்வாறு பாதிக்கப்படாத ஒரு குடும்பத்தினர் இப்படிச் செய்யும் போது நாங்கள் செய்ய வேண்டும் என்ற கொள்கை நிசசயமாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


## நொத்தாரிசு உறுதி எழுத்தாளர் கடமை

**இதுவரை டிப்போ வீதியில் இயங்கி வந்த அலுவலக செயற்பாடு கிளிநொச்சி மக்களின் நலன் கருதி 1.01.2005 இல் இருந்து மேலதிகமாக வாராந்தம் திங்கள், புதன் இருநாட்களும் கிளிநொச்சி பழைய புகையிரதவீதி இளம்தென்றல் வீதிக்கு அருகாமையில் செயற்படுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.**

**தகவல்:**
**தா.அரியரத்தினம்,**
**நொத்தாரிசு,**
**இல:22 D10**
**உருத்திரபுரம்**

(சி.11058)



## கிளிநொச்சி மாவட்ட தமிழ் சங்கம்–உறுப்புரிமை

தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டம் விரைவில் நடைபெற இருப்பதால் ஏற்கனவே உறுப்புரிமை பெற்றவர்கள் செயலாளரிடம் உறுப்புரிமை கட்டணத்தை செலுத்துவதுடன் உறுப்புரிமை படிவத்தையும் பெற்று 2005.01.20 ஆம் நாளுக்கு முன்னர் தங்கள் உறுப்புரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். உறுப்புரிமையை உறுதிப்படுத்தியவர்கள் மட்டுமே ஆண்டுப்பொதுக்கூட்டத்திற்கு அழைக்கப்பெறுவர்.

**வே.பரமநாதபிள்ளை,**
**செயலாளர்.**

(சி.11170)



## கேள்வி அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்டத்திற்கு அத்தியாவசிய சேவை ஆணையாளரினால் 2005 ஆண்டில் வழங்கப்படுகின்ற உலருணவுப் பொருட்களை வவுனியா பொருட்கள் வழங்கும் களஞ்சியத்திலிருந்து கொண்டு வருவதற்கான வாகனக் கூலிக்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கு கோரப்பட்டுள்ளது. விபரங்களை மாவட்ட புனர்வாழ்வுச் செயலகத்தில் 2005.01.10 ஆம் திகதி பெற்றுக்கொள்ளலாம்.**

**தி.இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி.11169)


## கடற்கொந்தளிப்பால் பாதிப்புற்றோருக்கு பூநகரிப் பிரதேச மக்கள் உதவி வழங்கல்

(பூநகரி)

கடற் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கென பெருமளவு பணமும் உலர் உணவுகளும் உடுப்பு வகைகளும் பூநகரி மக்களால் வழங்கப்பட்டுள்ளன.

செம்பன்குன்று எழுச்சிப் பேரவையால் 1700 ரூபாவும், கறுக்காய்த்தீவு எழுச்சிப் பேரவையால் 6800 ரூபாவும், நல்லூர் எழுச்சிப் பேரவையால் 11,600 ரூபாவும், முட்கொம்பன் எழுச்சிப் பேரவையால் 5340 ரூபாவும், மிதுசன் எழுச்சிப் பேரவையால் 1210 ரூபாவும், தம்பிராய் எழுச்சிப் பேரவையால் 6830 ரூபாவும், ஆலங்கேணி மாதர் சங்கத்தால் 11,130 ரூபாவும், கொல்லக்குறிச்சி மாதர் சங்கத்தால் 1070 ரூபாவும், அத்தாய் மாதர் சங்கத்தால் 1050 ரூபாவும், ஞானிமடம் கிராம அபிவிருத்தி சங்கத்தால் 1150 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் உலர் உணவுகளும், உடுப்புகளும் கிடைக்கப் பெற்றன. மொத்தமாக கிடைக்கப்பட்ட பணத்தில் 50,000 ரூபாயை பணமாகவும், 2000 ரூபாவுக்கு சூப்பிப் போத்தல்களாகவும் பூநகரி எழுச்சிப் பேரவை உறுப்பினர் செல்வம் புதுக்காட்டுச்சந்தியில் அமைக்கப்பட்ட செயலணிச் செயலகத்தினூடாக ஒப்படைத்துள்ளார்.

அத்துடன் கறுக்காய்த்தீவு வாழ் அதிபர் ஆசிரியர்களால் வழங்கப்பட்ட 3300 ரூபாவை அதிபர் தி.சிவநாதன் வலயக் கல்விப்பணிப்பாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

இச்சேகரிப்பு நிகழ்வு பூநகரியில் பலபாகங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதற்கு மக்கள் தங்கள் பூரண பங்களிப்பைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (34)

## நியூயோர்க் நகரில் த.பு.கழக தொண்டர்கள் உதவிப் பொருள் சேகரிப்பு

எமது தாயகத்து உடன் பிறப்புக்களின் துயர்துடைக்கும் பொருட்டு, தமிழர் புனர்வாழ்வுக் கழக தொண்டர்கள் நியூயோர்க் நகரின் பல முக்கிய இடங்களில் நிவாரண நிதி மற்றும் பொருட்களை சேகரித்தும், எம் இனத்தின் உடனடித் தேவைகள் குறித்த துண்டுபிரசுரங்களை விநியோகித்தும் வருகின்றனர்.

புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்களிடம் மட்டுமன்றி, பிற நாட்டு குடிமக்களின் பங்களிப்பினையும் எதிர்பார்த்து எடுத்த இம் முயற்சி பெரும் வெற்றியளித்துள்ளது. இப் பணியில் ஆண்கள், பெண்கள், சிறார்கள் புனர்வாழ்வுக்கழக தொண்டர்களாக நியூயோர்க் நகரின் பல முக்கிய வீதிகள், சந்திகள், பேருந்து தரிப்புமிடங்கள், தொடருந்து நிலையங்கள், முக்கிய வியாபார நிலையங்கள், இந்து மற்றும் கிறிஸ்தவ மத ஆலய வாயில்கள் போன்றவற்றில் நிவாரண நிதி மற்றும் பொருட்கள் சேகரிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பல்லின நாட்டு மக்கள் வாழ்கின்ற இந்நகரில், இனமத வேறுபாடின்றி அனைத்து மக்களும் தங்களது பங்களிப்புகளை செலுத்திவருவதும், புனர்வாழ்வுக் கழக இணையத்தளம் ஊடாக உதவி கள் வழங்குவதாக உறுதியளித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நிவாரணப் பொருட்கள் நியூ யோர்க் நகரிலுள்ள இரண்டு கிறிஸ்தவ ஆலயங்களில் சேர்ப்பதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

## வவுணதீவு வாவியில் வீழ்ந்து இருவர் பரிதாப மரணம்!

மட்டக்களப்பு வவுணதீவு பாலத்தால் போக்குவரத்து செய்த கிராம சேவகர் உட்பட இருவர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர்.

முனைக்காட்டைச் சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தர் பாலிப்போடி ஜெகநாதன், மற்றும் சோமசுந்தரம் சுதர்சன் ஆகிய இருவருமே இவ்வாறு பலியானவர்களாவர்.இவர்கள் உந்துருளியில் பயணம் செய்த போது வவுணதீவுப் பாலத்தின் தாழ்வான வீதியில் உந்துருளி வீதியை விட்டு விலகி வாவிக்குள் வீழ்ந்த போதே இச்சம்பவம் நடந்துள்ளது. உயிரிழந்தவர்களின் சடலங்களை தேடி மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.




வடக்கு- கிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குனர் வணபிதா மரியாம்பிள்ளை கருணாரட்ணம் அடிகள் கடற்பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகள் குறித்து வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு விளக்குவதையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழ கத்திடம் கையளித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பதனையும் படங்களில் காணலாம். (படம்-சோதி)

## உயிர்காக்க ஓடிய வர்த்தகர் ரூ. 8 இலட்சம் பணத்தை இழந்தார்!

### -மன்னார் நகரில் சம்பவம்

(மன்னார்)

கடற் கொந்தளிப்பின் அச்சத்தினால் உயிர்காக்க ஓடிய மன்னாரைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் 8 இலட்சம் ரூபா பணத்தை இழந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில்; கடந்த 30ஆம் திகதி மன்னார் நகரில் வெள்ளம் வருகின்றது என்ற வதந்தியினால் நகரத்தில் புதுவருடத்திற்கென மக்கள் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்த சமயம் தமது உயிரைக் காப்பாற்றும் பொருட்டு மக்கள் அங்குமிங்கும் சிதறி ஓடிய சமயம் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் வர்த்தக நிலையங்களை மூடாமல் சென்றவர்களுமுண்டு இவ்வாறு வர்த்தக நிலையத்தை மூடுவதற்காக வந்த சமயம் வர்த்தக நிலையத்தில் இருந்த 8 இலட்சம் ரூபாவை வர்த்தகர் ஒருவர் பறி கொடுத்தார். குறிப்பிட்ட பணம் திரு டப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (18)

# கிழக்குக் கரையோர பாரிய இடிபாடுகளால் மீட்பு நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்பு!

### -மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர்

(மட்டக்களப்பு)

**கிழக்குக் கரையோரங்களில் பாரிய இடிபாடுகள் காணப்படுவதால் மீட்புப் பணிகளை முழுமையாகச் செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இதனைச் செய்வதற்கு கனரக வாகனங்கள் தேவைப்படுகின்றன என்றார் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் .**

அவர் மேலும் தெரிவிக்கையில்; இன்றைய சூழ்நிலையில் இரண்டு விடயங்கள் மிகமுக்கியமாக பாரிய அளவில் செய்யப்படவேண்டியுள்ளது.

அதில் ஒன்று இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் கொண்டு வந்து குடியேற்றுவது, அடுத்தது வீதிப் போக்குவரத்து

அதாவது அம்பாறையில் இருந்து பொத்துவில் வரை செல்கின்ற பாதையில் எட்டிற்கும் மேற்பட்ட இடங்கள் உடைப்பெடுத்துள்ளன. இவற்றில் ஐந்திற்கு உடனடியாகப் பாலம் போட வேண்டியுள்ளது இவை தொடர்பாக அரசாங்கம் கூடுதலாகக கவனம் எடுக்குமேயானால் அவற்றை உடனடியாகச் செய்யலாம். ஏனெனில் கடந்த காலங்களில் யுத்தம் நடைபெற்ற போது பாலங்கள் உடைகின்ற போது அவற்றை ஓரிரு நாட்களிலே திருத்தி விடுவார்கள் ஆனால் அவ்வாறு இங்கு செயற்படுத்தாமல் இருப்பதால் போக்குவரத்து மிக கஷ்டமாக உள்ளது. இதனால் முழுமையாக ஒன்றையும் செய்ய முடியாத நிலை இருக்கின்றது.

இதேவேளை மீளக்குடியேற்றுவதாக இருந்தால் முழுமையாக வீடிழந்தவர்கள், வீடிருந்தும் பொருட்களை இழந்தவர்கள் அடுத்ததாக முழுமையாக மீன்பிடித் தொழிலை நம்பி அன்றாடம் தொழில செய்கின்றவர்கள் அனைவருமே தொழிலை இழந்துள்ளனர். இவர்களுக்குகான கொடுப்பனவுகள் தொடர்பாகவும் சிந்திக்க வேண்டும்.

இவைகள் தொடர்பாகப் பாரிய அளவில் எந்த விதமான வெளிப்படையான அறிவித்தலையும் இன்று வரை அரசாங்கம் செய்யாத சூழ்நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் அரச சார்பற்ற உள்ளூர் நிறுவனங்களும் வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களும் ஓரளவிற்கு ஒரு சில இடங்களைப் பொறுப்பெடுத்து செயற்பட்டு வருகின்றன.

மீண்டும் கட்டி எழுப்புவது தொடர்பாகவும் நாங்கள் சிந்திப்பது வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களினுடைய உதவிகளையே நாங்கள் முழுமையாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம் அந்த உதவி முழுமையாக சரியாக உள்ளது.

அதேவேளை வடக்கு- கிழக்கின் அபிவிருத்தி தொடர்பாக சர்வதேச சமூகம் நேரடியாக பார்வையிட்டு செயற்படுவதற்குச் சிந்திக்க வேண்டும் ஏனெனில் அது எங்களுடைய வரலாற்றில் கடந்த காலத்தில் நடந்து முடிந்தவையாக இருப்பதால் சர்வதேச சமூகம் இது தொடர்பாகச் சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது என்றார்.

### கல்லடிப்பாலம் இடிந்து வீழ்ந்தது

(மட்டக்களப்பு)

அம்பாறையில் பெய்த கடும் மழையினால் கல்முனை அக்கரைப்பற்றிற்கு இடையிலான கல்லடிப்பாலம் இடிந்து வீழ்ந்துள்ளது.

இந்தப் பாலம் இடிந்து வீழ்ந்தமையால் கல்முனை அக்கரைப் பற்றிற்கான போக்கு வரவுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த காவல்துறை முயற்சி

கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லை அதிகரித்ததையடுத்து தமிழீழக் காவல் துறையினர் அவற்றை பிடித்துக்கட்டி வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் நகரப்பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி கால் நடைகளால் வீதி விபத்துக்கள் ஏற்பட்டுவருவதைத் தொடர்ந்து இதனைப் பல முறை உரிமையாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்த போதும் அதன் உரிமையாளர்கள் அவற்றைக் கட்டுப் படுத்தாததையடுத்து தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் வீதியில் நடமாடும் கால்நடைகளைப் பிடித்து கட்டி வருகின்றனர்.

இதேவளை இரவு வேளைகளில் வீதியில் பெருந்தொகையான கால் நடைகளின் நடமாட்டம் அதிகரிப்பதால் அவற்றையும் பிடித்து கட்டுவதற்கான செயற்பாடுகளில் தமிழீழ காவல்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

### -கல்குடாப் பிரதேசத்தில்

## வெள்ள அனர்த்தத்தால் உயிரிழந்த மக்களுக்கு சுடரேற்றி அஞ்சலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலை காரணமாக உயிரிழந்தவர்களின் நினைவாக நேற்று முன்தினம் கல்குடா கடலோரம் அகவணக்கம், சுடரேற்றும் நிகழ்வு நடைபெற்றது.

இப் பிரதேசத்தில் 346 பேர் உயிரிழந்துள்ளார்கள். அவர்கள் நினைவாக 346 சுடர்கள் ஏற்றப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிரிழந்த 2,254 பேரும் இந்த நிகழ்வின்போது நினைவு கூரப்பட்டனர். பாராளுமன்ற உறுப்பினர் எஸ் ஜெயானந்தமூர்த்தியும் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலை காரணமாக 34 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. இப் பாடசாலைகளில் 12 முற்றாக தரைமட்டமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்வி வலயம் 03, பட்டிருப்பு கல்வி வலயம்-06, கல்குடா கல்வி வலயம்-03 என 12 பாடசாலைகள் முற்றாக தரைமட்டமாகியுள்ளன. மட்டக்களப்பு -11, பட்டிருப்பு-06, கல்குடா-06 என 22 பாடசாலைகள் பகுதி சேதமடைந்துள்ளன. இதே வேளை கடற்புவி நடுக்க ஆழிப்பேரலையில் உயிரிழந்த பாடசாலை மாணவர்களுக்காக நேற்று முன்தினம் வவுனியா விபுலானந்த வித்தியாசாலையில் தீபங்கள் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்கள் பலரும் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டது. அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தேவையான பாடசாலை உபகரணங்களையும், சீருடைகளையும் பெற்றுக கொடுக்க சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தொடர்பு கொள்ள வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு செம்மலையைச் சேர்ந்த சரவணை உலகநாதன், இரணைப்பாலையைச் சேர்ந்த கமலேஸ்வரி குடும்பத்தினரை அறிவொளிவீதி, ஜெயபுரத்தில் வதியும் பிரகாசம் பிரபா என்பவர் தேடுகின்றார். இவர்களை உடனடியாகத் தொலைபேசி இலக்கம் 0712295228 உடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளார்.

தாளையடி செம்பியன்பற்றைச் சேர்ந்த வீரகுமார்,வஜிதா, முல்லைத்தீவைச் சேர்ந்த வதனி,சோபனா, கேதீஸ்வரி, கமலராஜி, கலையழகன் ஆகியோரை முரசுமோட்டையைச் சேர்ந்த சுஜாதா அமரசிங்கம் தேடுகின்றார்.

முல்லைத்தீவு வண்ணான் குளத்தைச் சேர்ந்த தனுஜா எனும் நான்கு வயது சிறுமி 26-12-2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட அனர்த்தத்தின் பின் காணாமல் போயுள்ளார். மேற்படி சிறுமியைக் கண்டவர்கள் அருள் ராஜ் பவான் வழங்கல் பகுதி நிதித்துறையுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர். (சோ)

## கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பற்றாக்குறை

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பற்றாக்குறையாக உள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி தெரிவித்தார்.வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் கல்வி நிர்வாக சேவைகளை மேற்கொள்ள 14 அதிகாரிகள் தேவையாக உள்ள போதும் 3 பேரே இங்கு உள்ளனர். இவர்களில் ஒருவர் தற்போது வவு னியா தெற்கு கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இதனால் 2005 ஆம் ஆண்டில் இரு அதிகாரிகளே உள்ளனர். கல்வி நிர்வாக சேவையை சீராக மேற்கொள்ள முடியவில்லை என அவர் மேலும தெரிவித்தார். (10)

## வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்திக்கு கடந்த ஆண்டில் 168 மில்லியன் செலவு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்திக்கு கடந்த ஆண்டில் 168 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவன புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டக்கல்வி அபிவிருத்திக்கென கடந்த ஆண்டில் அரசாங்கத்தினால் 30.3 மில்லியன் ரூபாவும், யுனிசெப் நிறுவனத்தினால் 8.9 மில்லியன் ரூபாவும் ஏனைய நிறுவனங்களினால் 128.9 மில்லியன் ரூபாவுமாக 168.1 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வவுனியா மாவட்ட பாடசாலைகளில் கற்கும் ஒவ்வொரு மாணவருக்கும் 3818 ரூபா கடந்த ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று 2002ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் 31.0 மில்லியன் ரூபாவும், யுனிசெப் நிறுவனத்தினால் 10.0 மில்லியன் ரூபாவும் ஏனைய நிறுவனங்களினால் 54.2 மில்லியன் ரூபாவுமாக 95.2மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் 2164 ரூபா செலவிடப்பட்டது. 2003 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் 54.5 மில்லியன் ரூபாவும், யுனிசெப் நிறுவனத்தினால் 11.0 மில்லியன் ரூபாவும் ஏனைய நிறுவனங்களினால் 60.2 மில்லியன் ரூபாவுமாக 125.7 மில்லியன்ரூபா கல்வி அபிவிருத்திக்காக செலவிடப்பட்டது. இதன்மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் 2840 ரூபா செலவிடப்பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவன புள்ளி விபரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (10)

### சிரமதானப் பணி

வட்டக்கச்சி இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் வட்டக்கச்சி கட்சன்வீதி,வீதிகள் அப்பகுதி மக்களால் புனரமைகக்கப்பட்டுள்ளன.கடந்த 20ஆம் திகதி தொடக்கம் இச் சிரமதானப் பணி நடைபெற்றது. கட்சன் வீதிச் சந்திக்கு அண்மையாக இருந்து இரணைமடு குளக்கட்டு அண்மையாக உள்ள வீதிகளுக்கு இருபக்கமும் வாய்க்கால் வெட்டி பெருமரங்களை அகற்றியும் மற்றும்வீதியின் பள்ளங்களுக்கு மண் இட்டும் சிரமதானம் செய்யப்பட்டுள்ளது. (12)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சிறிலங்கா கிரிக்கெட் அணி விஜயம்


### நிதி திரட்டவும் முடிவு

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியால் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிர் இழந்தனர். இதனால் இலங்கையில் பல ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இதனால் இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்து சுற்றுப் பயணத்தை இரத்துச் செய்துவிட்டு நாடு திரும்பியது.

நேற்று அணித்தலைவர் அத்தப்பத்து , ஜெயசூரியா,ஜெயந்த,வாஸ், தில்கரா, பெர்னாண்டோ ஆகியோர் ஒன்று சேர்ந்து சேதப் பகுதிகளைப் பார்வையிட்டனர். அப்போது அத்தப்பத்து கூறியதாவது;

சுனாமியால் எங்கள் நாடு தாக்கப் பட்டதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நாங்கள் நிதி திரட்ட முடிவு செய்துள்ளோம் இவ்வாறு அவர் கூறினார்.

## கேப்டவுன் டெஸ்ட் கலிஸ் சதம் தென்னாபிரிக்கா வலுவான ஓட்டம்




தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கேப்டவுனில் நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடி ஜாக்கலிஸின் அபார துடுப்பாட்டத்தின் உதவியுடன் முதல் இனிங்சிற்காக 441 ஓட்டங்களைப் பெற்றது. நேற்று முன்தினம் ஆரம்பமான இப் போட்டியில் முதல் நாள் ஆட்ட நேர முடிவின்போது 4 விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றிருந்த தென்னபிரிக்கா நேற்றைய இரண்டாம் நாளில் 441 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்தது. துடுப்பாட்டத்தில் கலிஸ் அபாரமாக ஆடி 149 ஓட்டங்களைக் குவித்தார். இவரைவிட நிக்கிபோயே 76, சிமித் 74 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் சகல துறை வீரர் பிளின் டொப் 4 விக்கெட்டுக் களையும், ஹொக்காட் 2 விக்கெட்டுக்களையும், அஸ்லிஹைல்ஸ் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இங்கிலாந்து மதியபோசன இடைவேளையின் பின் தனது துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது. இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்பு சுனாமி பேரழிவில் உயிர் இழந்த வர்களுக்காக இரு அணி வீரர்கள் மற்றும் ரசிகர்கள் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

## ரிக்கி பொண்டிங் சிறப்புத் துடுப்பாட்டம்; வலுவான ஓட்ட எண்ணிக்கை நோக்கி அவுஸ்.



அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நடைபெற்றுவரும் மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் நாளான நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்சிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் அபாரமாக ஆடி ஆட்டமிழக்காது 155 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவரை விட மாட்டீன் 67 ஓட்டங்களையும், கிளார்க் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

லாங்கர் 13, ஹெய்டன் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் டினேஸ் கனேரியா மூன்று விக்கெட்டுக்களையும், நவீட் உல்ஹசன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றது.துடுப் பாட்டத்தில் சல்மான் பட் 108 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் மக்கில் ஐந்து விக்கெட்டுக்களையும், மெக்ராத் நான்கு விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.



## பிரிமியர்லீக் கால்பந்துப் போட்டி; செல்சியா அணி தொடர்ந்தும் முன்னணியில்

பிரிமியர் லீக் காலபந்துத் தொடரில் செல்சியா கிளப் அணி வெற்றி பெற்று தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருகிறது. முன்னணி கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் பிரிமியர் லீக் கால்பந்து தொடர் இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளிலும் நடந்து வருகிறது. கடந்த சனியன்று நடந்த போட்டியில் செல்சியா, லிவர் பூல் அணியை எதிர்த்து விளையாடியது. இரு அணிகளும் சமவலிமையுடன் மோத முதல் பாதியில் கோல் ஏதும் அடிக்கப்படவில்லை. பின்னர் ஆட்டத்தின் 80ஆவது நிமிடத்தில் செல்சியா அணியின் ஜியோ கோலி அபாரமான கோல் அடித்தார். இதன் மூலம் செல்சியா 1-0 என்ற கோல் முன்னிலையில் வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் அர்செனல் 3-1 என்ற கோல் கணக்கில் கார்ல்டன் அணியை வீழ்த்தியது. அர்செனல் அணியின் பிரிடி லிஜீங்பர்க் இரண்டு கோலும், ராபின் வான் பெர்சி ஒரு கோலும் அடித்தனர். மான்செஸ்டர் யுனைடெட் அணி 2-0 என்ற கோல் கணக்கில் மிடில்ஸ்பிரோ அணியை வென்றது.

தற்போதைய நிலவரப்படி, செல்சியா அணி 52 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் இருந்து வருகிறது. அர்செனல் (47) இரண்டாவது இடத்தையும், மான்செஸ்டர் யுனைடெட் (43) மூன்றாவது இடத்தையும், எவர்டன் (40) நான்காவது இடத்தையும் பெற்றுள்ளன.





## சென்னை ஓபன் டென்னிஸில் பட்டத்தை கைப்பற்றுவேன்-கார்லஸ்மோயா நம்பிக்கை

சென்னையில் நேற்று ஆரம்பமான சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில் நடப்பு சம்பியனான ஸ்பெயின் வீரர் கார்லஸ்மோயா இம்முறையும் பட்டத்தைக் கைப்பற்றுவேன் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி.மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

சுனாமி தாக்குதலால் சென்னையிலும் பாதிப்பு இருந்ததால் இப்போட்டியில் பங்கேற்கலாமா வேண்டாமா என்பது குறித்து முதலில் தயங்கினேன். பிறகு எனது மேலாளருடன் கலந்தாலோசித்து இறுதியாகப் போட்டியில் பங்கேற்பது என ஊர்ஜிதம் செய்தேன் என்றார். குறிப்பாக ஆண்டின் ஆரம்பப் போட்டி என்பதால் இதில் வெற்றி பெற்று இந்த ஆண்டை வெற்றி ஆண்டாக தொடக்க விரும்புகிறேன் என்றார்.

## உலக 11 பேர் ஒரு நாள் அணித் தேர்வு அணியின் தலைவராக பொண்டிங்



சுனாமி இராட்சத அலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நிதி திரட்ட நடத்தப்படும் ஒரு நாள் போட்டித் தொடருக்கான உலக 11 பேர் அணிக்கு ரிக்கி பொண்டிங் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

சுனாமி இராட்சத அலைகளால் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பெரும் உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டன.


கடல் பூகம்பப் பாதிப்பினால், இந்தோனேசியாவில் அதிக பட்சமாக ஒரு லட்சம் பேர் உயிரிழந்தனர். இலங்கையில் 30 ஆயிரம் பேர் பலியானார்கள்.

தவிர தமிழ்நாட்டில் 8 ஆயிரம் பேரும், அந்தமான், நிக்கோபார் தீவில் ஆயிரம் பேரும், தாய்லாந்தில் 2 ஆயிரம் பேரும் பலியானார்கள். மேலும் சிங்கப்பூர், மாலைதீவுகளும் இதனால் பாதிக்கப்பட்டன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கடல் பூகம்பம் மற்றும் சுனாமியினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவுவதற்காக உலகம் முழுவதிலும் இருந்து நிவாரணப் பொருட்களும், நிதியுதவியும் வந்து கொண்டிருக்கிறது.சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நிதி திரட்டும் வகையில் சர்வதேச கிரிக்கெட் சபை இரண்டு ஒரு நாள் போட்டித் தொடரை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதன் முதல் ஒரு நாள் போட்டி அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்பேர்ன் நகரில் வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு சென்னை ஓபன் - 2005 அர்ப்பணம்?



கடல் தாயே உனது கரையில் கிளிஞ்சல்களைத்தான் பொறுக்கி வந்தோம். இப்போது விலை மதிப்பற்ற மனித உடல்களைப் பொறுக்க வைத்துவிட்டாயே! விளையாட்டு ஆர்வலரான பாஸ்கர், தனது ஆட்டோவில் ஒட்டியுள்ள பல்வேறு விளையாட்டுப் படங்களுக்கு மத்தியில் பளிச்சிட வைத்துள்ளார் மேற்கண்ட வாசகத்தை.


சென்னை நுங்கம்பாக்கம் டென்னிஸ் ஸ்டேடியத்துக்கு ஞாயிற்றுக்கிழமை காலை சவாரி ஏற்றிக்கொண்டு வந்திருந்த அவர், கார்லஸ் மோயா உள்ளிட்ட டென்னிஸ் பிரபலங்கள் அங்கு உலாவிக் கொண்டிருப்பதைக் கண்டு ஒருகணம் திகைத்தார்.

ஆனால், அவருக்குத் தெரியாது 2005இல் நடைபெறும் சென்னை ஓபன் போட்டி ஏறக்குறைய சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்று: ஆம். ஏ.டி.பி. அமைப்பாளர் அதிகாரபூர்வமாக அறிவிக்காவிட்டாலும், இப்போட்டியின் மூலம் கிடைக்கும் பெரும்பாலான வருவாயை சுனாமியால் சீரழிந்தவர்களின் நலனுக்காக வழங்கவுள்ளனர்.

போட்டி சம்பந்தமான வருவாய்களைக் கொடுப்பது ஒரு பக்கம் இருந்தாலும், அழிவின் உக்கிரத்தை கருத்திற்கொண்ட ஏ.டி.பி. போட்டி அமைப்பாளர்கள் விம்பிள்டன் சம்பியன் மரிய ஷரபோவா, கார்லஸ் மோயா, பர்தான் ஸ்ரீசப்பன் உள்ளிட்ட நட்சத்திர வீர, வீராங்கனைகள் பலரின் டி சர்ட், ஷூ, டென்னிஸ் ராக்கெட் உள்ளிட்ட விளையாட்டு சாதனங்களை ஏலத்தில் விட்டு, அதன் மூலம் கிடைக்கும் வருவாயையும் சுனாமி நிவாரண நிதிக்கு அளிக்கவுள்ளனர்.


இப்போட்டியின் மொத்தப் பரிசுத் தொகையில் (1.84 கோடி) பெரும்பாலான தொகையை சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்காக வீரர்கள் வழங்கவுள்ளனர். இது குறித்து அறிவிப்பு ஒரு வார காலம் நடைபெறும். இப்போட்டியினிடையே அவ்வப்போது வெளிவரலாம் என டென்னிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## கண்காட்சி டென்னிஸ் போட்டி வீனசை வீழ்த்தினார்ஷரபோவா



தாய்லாந்தில் நடந்த கண்காட்சி டென்னிஸ் போட்டியில் ரஷ்யாவின் மரியாஷரபோவா அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்சை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார். தாய்லாந்தில் வரும் ஒக்ரோபரில் ஏ.டி.பி அந்தஸ்துப் பெற்ற டென்னிஸ் போட்டி நடக்கிறது. இதற்கு முன்னோடியாக சியாங்மியா நகரில் வீனஸ் வில்லியம்ஸ், ஷரபோவா மோதும் கண்காட்சிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் நடப்பு விம்பிள்டன் சம்பியனான ஷரபோவா அற்புதமாகச் செயற்பட்டார் இவரது அசுரவேக சர்வீசில் வீனஸ் வில்லியம்ஸ் திணறிப்போனார். முதல் செட்டை 6-4 என்ற கணக்கில் வென்ற ஷரபோவா, அடுத்த செட்டிலும் ஆதிக்கம் செலுத்தினார். இறுதியில் 6-4,6-3 என்ற நேர் செட்களில் வீனசை வீழ்த்திய ஷரபோவா கோப்பையைக் கைப்பற்றினார்.

சுனாமி பேரழிவில் தாய்லாந்தும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இப்போட்டியின் பங்கேற்பதற்காக முதல் முறையாக தாய்லாந்து வந்த ஷரபோவா, இந்த சம்பவத்தைக் கேட்டதும் மிகவும் வேதனைப்பட்டார். உடனே ரூபாய் 4.5 இலட்சம் நிதி உதவி அளித்தார். நேற்று இவர் உயிர் இழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக கறுப்பு பட்டி அணிந்து விளையாடித் தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார்.



## சிந்தனைக்கு

சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்கு முறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும் போராட்டத்தில் குதித்தோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 04-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## நிவாரணப் பணிக்கு அப்பால்!

சுனாமி பேரலைகளால் இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தமானது இன்று முழுஅளவில் அரசியல் மயமானதாக மாறி விட்டதா? என்ற சந்தேகம் எழத் தொடங்கியுள்ளது. ஏனெனில் உதவி மீட்புப்பணி என்ற பேரில் அரசியல்–இராஜதந்திர–இராணுவ நகர்வுகள இடம்பெறத் தொடங்கிவிட்டதற்கான சமிக்ஞைகள் தெளிவாகவே தென்படத் தொடங்கியுள்ளன.

ஒரு நாட்டிற்கு ஏற்படும் அவலம் அதற்கு கிடைக்கப்பெறும் உதவிகள், நிவாரணம் என்பவற்றில் மனிதாபிமானம் மட்டுமல்ல அதற்கு மேலாக அரசியலும் உண்டு என்பது புரியப்படாத தொன்றல்ல. அதைப் புரிந்து கொள்ளாது போனால் உலக அரசியலில் ஆரம்ப அறிவைக், கூட நாம் பெற்றவர்களாகவே இல்லை என்றே கொள்ள வேண்டும்.

அவலத்திலும் நெருங்கிய நட்பு நாடுகள், வேண்டப்படாத நாடுகள் எனப் பாகுபடுத்தப்பட்டே உதவிகளின் அளவுகள் தீர்மானிக்கப்படுகின்றன. அதாவது அனர்த்தத்தின் கொடூரம், மக்களின் அவலம் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு அவை வழங்கப்படுவதில்லை. அதற்கும் மேலாக வேண்டியவர்கள் வேண்டதவர்கள் என்ற ரீதியிலேயே உதவிகள் வழங்கப்படுகின்றன. இதைத் தவறு என்றோ மனிதாபிமானமற்ற செயல் என்றோ குறை கூறவும், திருத்திக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடவும் இங்கு நாம் முற்படவில்லை.

ஆனால் அவலத்திற்கான உதவிகள், நிவாரணப்பணிகள் என்பன புதிய நெருக்கடிகளைத் தோற்றிவிக்கக் கூடியவையாகவும், புதிய அரசியல் இராஜதந்திர இராணுவ நகர்வுகளாகவும் இருப்பது குறித்தே கவலை தெரிவிக்க வேண்டியதாகிறது. இலங்கையில் பேரலையின் தாக்கத்தினால் பேரிழப்பு ஏற்பட்டதென்பது உண்மையே. இவ் இழப்பில் இருந்து மக்களை விடுவிப்பதற்கு போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் உண்மையே. ஆனால் தற்போதுள்ள கேள்வியானது சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பால் இதனை மேற்கொள்ள முடியாதா? என்பதே ஆகும்.

அதாவது மக்களுக்கு ஏற்பட்ட அனர்த்தத்திலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்குப் போதிய அளவில் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பில் ஆளணி இல்லையா? என்பதே ஆகும். ஆனால் அவ்வாறு கூறுவதற்கில்லை. ஏனெனில் நாட்டின் சனத்தொகைக்கும், ஆயுதப் படைத்தரப்பிற்கும் இடையிலான விகிதாசாரத்தைப் பொறுத்தவரையில் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பின் ஆளணியானது மிக உயர்ந்த விகிதாசாரத்தைக் கொண்டதாகவே உள்ளது.

இந் நிலையில் வெளிநாட்டு இராணுவத்தினரை மீட்புப் பணிக்கு அழைக்க வேண்டிய தேவையோ அன்றி அனுமதிக்க வேண்டிய தேவையோ அவசியமானதா? அதிலும் குறிப்பாக யுத்த நிறுத்தம் ஒன்று நாட்டில் நடைமுறையில் உள்ளநிலையிலும் விடுதலைப்புலிகள் தமிழர் தாயகத்தில் சுனாமி விளைவித்த அனர்த்தத்திலிருந்து மக்களை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டிருக்கையிலும் சிறிலங்கா அரசு தனது இராணுவத்தை மீட்புப் பணிகளில் பயன்படுத்திக் கொண்டால் என்ன?

அது மட்டுமல்ல 'சுனாமி' பேரலைகளால் சிறிலங்கா அரசு ஸ்தம்பிதநிலை அடையும் வகையிலோ அன்றி சிறிலங்கா அரசின் ஆள்புலப்பரப்பு முழு அளவிலுமானதாகவோ பாதிப்பிற்குள்ளாகவில்லை. சிறிலங்கா அரசின் நிர்வாக மையமும், அதன் அரசியல் இராஜதந்திர செயற்பாடுகளும் முழு அளவில் செயற்படத்தக்கதானதொரு நிலையிலுமே வெளிநாட்டுப் படைகள் மீட்புப் பணிக்காக அழைக்கப்பட்டுள்ளன/ அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஆகையினால் இத்தகையதொரு நிலையானது தனியாக சுனாமியினால் ஏற்பட்ட அனர்த்தத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட தொரு நடவடிக்கையாக நோக்கப்படுதல் எத்தனை தூரம் பொருத்தப்பாடானதாகும்? ஏனெனில் இந் நடவடிக்கையானது இனப்பிரச்சினை விடயத்திலும் பாதிப்பு– அதாவது இராணுவச்சமநிலை இராஜதந்திரச் செயற்பாடுகளில் தாக்கத்தை விளைவிக்கத் தக்கதாக அமையக்கூடியதாகும்.

அது மட்டுமன்றி ஒன்றிற்கு மேற்பட்ட இராணுவங்களின் வருகை அதிலும் குறிப்பாக இப் பிராந்தியத்திற்கு வெளியேயுள்ள நாடுகளின் இராணுவ பிரசன்னமானது இலங்கையில் மட்டுமல்ல இப் பிராந்தியத்தின் இராணுவச் சமநிலையிலும் மாற்றங்களையும், தாக்கத்தையும் விளைவிக்கக்கூடியதாகும்.

அதாவது சுனாமியினால் இலங்கையில் ஏற்பட்டுள்ள அனர்த்தத்தின் மீட்புப் பணி புனர்வாழ்வு என்பவற்றிற்கும் அப்பாற்பட்ட விதத்தில் வெளிநாடுகளின் பங்கு பணி இருக்குமானால் அது இலங்கையினதும் இப் பிராந்தியத்தினதும் அரசியல் இராஜதந்திர சூழ்நிலைகளில் பெரும் தாக்கத்தை விளைவிப்பவையாகவே இருக்கும். இது இலங்கையின் எதிர்காலத்தை சிக்கலுக்குள்ளானதாகவும், குழப்பம் நிறைந்தனவாகவும் மாற்றும் எனின் மிகையாகாது.

# யுனிசெவ் பிரதம நிறைவேற்று அதிகாரி முல்லை நகரைப் பார்வையிட்டார்

- உதவிகளைச் செயலணிக் குழுவூடாக வழங்குவதாக அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி கரோல் பெலமி கடற்கொந்தளிப்பால் முற்றாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நகரைச் சென்று பார்வையிட்டுள்ளதுடன், முள்ளியவளை அவசரகால செயலணிக் குழுவுடன் ஒரு கலந்துரையாடலையும் நடாத்தியுள்ளார்.

நேற்றுக் காலை விசேட உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வருகை தந்த கரோல் பெலமி அங்கிருந்து யுனிசெவ் வாகனத்தில் தமிழீழ காவல் துறையினரின் பாதுகாப்பில் முல்லைத்தீவுக்குச் சென்று அங்கு பாதிக்கப்பட்ட பல பிரதேசங்களையும் பார்வையிட்டார்.

பின்னர் முள்ளியவளைப் பகுதிக்குச் சென்று அங்கு வித்தியானந்தாக் கல்லூரியில் அமைந்துள்ள அவசரகால செயலணிக் குழுவுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இவருடன் வதிவிடப் பிரதிநிதி வெனிபுறுவ் அவர்களும் சென்றிருந்தார். அங்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த ஆரணி தலைமையில் மேற்படி கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் அவசரகால செயலணிக் குழு தங்களின் பதிவில் உள்ள இறந்தவர்களின் விபரங்களையும், நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின விபரங்களையும், அங்கு தேவைப்படும் உதவிகளையும் தெரிவித்தனர். அதற்கு இணங்க கரோல் பெலமி தேவைப்படும் உதவிகளை தாம் செய்யத் தயாராக உள்ளதாகவும் அவற்றைச் செயலணிக் குழுவிற்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன திட்டமிடல் செயலக பிரதிப்பணிப்பாளர் மாறன் , முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், தமிழர் புனர்வாழ்வுக் - கழக உறுப்பினர்கள், மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பிற்கு முன்னர் கரோல் பெலமி வித்தியானந்தாக் கல்லூரியில் தங்கியுள்ள மக்களையும், சிறுவர்களையும் பார்வையிட்டு அவர்களிடம் அனர்த்த நிலமை பற்றிக் கேட்டறிந்து கொண்டார். இச்சந்திப்பை முடித்துக் கொண்டு கிளிநொச்சி வந்த யுனி செவ் அதிகாரி தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி அவர் களையும் சந்தித்து உரையாடியுள்ளார். (கு.ச)

## தற்காலிக பங்கீட்டட்டை பெறக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செயலணிக் குழுவால் வழங்கப்படுகின்ற தற்காலிக பங்கீட்டட்டை பெறாதவர்கள் அனைவரையும் கீழ்வரும் ஒழுங்கின் அடிப்படையில் தவறாது பதிவு செய்து கொள்ளுமாறு புதுக்காட்டுச்சந்தி செய்லணிக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி கிளி. மத்திய கல்லூரியில் இன்று பிற்பகல் 4.00மணிக்கும், கிளி/மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கும், தருமபுரம் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 1.00 மணிக்கும் பதிவுகள் நடைபெறும். எனவே செலணிக் குழுவில் பதிவு செய்து வழங்கப்படும் தற்காலிக பதிவு அட்டை பெறாதவர்களும் உறவினர் வீடுகளில் தங்கி இருப்பவர்களும் தவறாது பதிவுகளை மேற் கொள்ளுமாறும் புதுக்காட்டுச்சந்தி செயலணிக் குழுசெயலகம் கேட்டுள்ளது.

இதேவேளை வரும் 05.01.2005 அன்று பளைப்பிரதேச செயல கத்தில் காலை 9.00 மணி க்கும்,இயக்கச்சிப் பாடசாலையில் நண்பகல் 12.00 மணிக்கும் பதிவுள் நடைபெறும். எனவே அனை வரும் தமது பதிவுகளை மேற் கொள்ளுமாறும் செயலணிக்குழு கேட்டுள்ளது.

(லோ,தீ)

## கிடைக்கும் நிதி உதவிகள் மீள் குடியமர்வின் போது வழங்கப்படும்

(அலுவலக செய்தியாளர்)

கடல் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதவி நிதிகள் வங்கியில் வைப்பிலிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் கடல் அலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கென அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் நலன் விரும்பிகளாலும் வழங்கப்படும் உதவிக் கொடுப்பனவுகளை அப்பகுதி செயலணிக்குழுவினரின் கணக்கில் வங்கியில் வைப்பிலிடவுள்ளதாக செயலணிக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வைப்புச் செய்யப்படும் நிதியினை மக்கள் மீளக்குடியமர்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு குடியமர்த்தப்படும்போது ஆரம்ப வாழ்வாதாரக் கொடுப்பனவாக வழங்க தீர்மானித்துள்ளதாகவும் செயலணிக்குழுவினர் தெரிவிக்கின்றனர். அத்தோடு மீளக குடியமர்த்தப்படும் வரை செயலணிக்குழுவினரின் உதவித் திட்டத்தின் கீழ் சகல வசதிகளும் செய்யப்பட்டு வருவதனாலேயே இந் நிதியினை உடனடியாக மக்களிடம வழங்காது மீள்குடியமர்வின் போது வழங்கத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரியவிக்கின்றனர்.

(ச,கு)

## உபகரணங்கள் கோரப்படுகிறது

சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீள்க்குடியமர்த்த முன்னர் இவ்வனர்த்தத்தினால் கடல் உள்வந்த இடங்களில் துப்புரவாக்கும் பணியை அதிதீவிரப்படுத்தும முகமாக தொண்டர் களை உள்ளடக்கிய அணிகள் இப்பணியில் ஈடுபடுத்தப் படவுள்ளனர். இதற்கு தொண்டர்களாகப்பணியாற்ற வேண்டியவர்கள் அப்பணியில் இணைந்து கொள்வதுடன் அவசரமாகத் தெளிகருவிகள்,நீர் இறைக்கும் இயந்திரங்கள் மேற்படி பணிக்காகத் தேவைப்படுகின்றன. இவ்வாறான உபகரணங்களைத் தொண்டு அடிப்படையில் தந்து உதவ முன்வருபவர்கள் இவ்வுப கரணங்களுடன் இன்று காலை 7.30 மணியளவில் நெல்லியடி வதிரி யிலுள்ள சுனாமி அனர்த்த இணைப்பு காரியாலத்திற்கு வருகை தரக்கோரப பட்டுள்ளனர்.

## பிற்போடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இன்று நடைபெறவிருந்த மாவட்டகல்வி, சுகாதாரக் குழுக் கூட்டங்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று நடைபெற மாட்டாதெனவும் மேற்படி கூட்டங்கள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

(சோ)

## சமூகம்தரவும்

" பளை கோட்டத்தில் கடமை புரியும் சகல ஆசிரியர்களையும், பளை மத்திய கல்லூரியில் கற்கும் க.பொ.த.(உ/த) மாணவர்களையும் இன்று காலை 9.00 மணிக்கு பளை மத்திய கல்லூரிக்கு தவறாது சமூகம் கொடுக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கிறார்."

## - யாழ்.இல் சண்ரெல் நிறுவனத்தால் - பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ இலவச தொலைத் தொடர்பு சேவை

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களின் நன்மை கருதி அவர்களின் தொடர்புகளினை இலகுபடுத்துவதற்காக சண்ரெல் நிறுவத்தினர் யாழ்ப்பாணத்தில் ஐந்து இடங்களில் தற்காலிகத் தொலைத் தொடர்பு நிலயங்களை அமைத்துள்ளனர். யாழ்.பேருந்து நிலயம், யாழ்.வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு, யாழ்.வைத் தியசாலை நோயாளர் விடுதி, யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன், யாழ்.கொக்குவில் பொற்பதி ஆலயத்திற்கு அருகில் ஆகிய ஐந்து இடங்களிலும் மேற்படி நிலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத் தொலைத் தொடர்பு நிலயங்களூடாகத் தங்களுக்குத் தேவையான இடங்களுக்கு இலவ சமாகத் தொடர்பினை ஏற்படுத்தித் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள முடியும். இன்றைய மக்கள் பாதிப்புற்ற நிலைமையினைக் கருத்திற் கொண்டே ஏற்படுத்தப்படும். இந் நிலயங்களை வேறு எத்தேவைகளுக்கும் பயன்படுத்தாமல் உண்மையான மக்கள் பாதிப்பு விடயங்களிற்கான தகவல்களைப் பரிமாறுவதற்காகப் பயன்படுத்தி ஒத்துழைக்குமாறு சண்ரெல் நிறுவத்தினர் கேட்டுள்ளனர்.(சு)

வடமராட்சியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு

# பாதிக்கப்பட்ட கிராமங்களை அண்டி புதிய முகாம்கள் அமைக்க முடிவு!

வடமராட்சி வடக்கின் கரையோரப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களிற்கான உதவித் திட்டங்களை துரிதப்படுத்த ஏதுவாக பாதிக்கப்பட்ட கிராமங்களை அண்டி புதிய முகாமகளைஅமைக்கத் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. நேற்று மாலை அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்தினில் அரச அதிபரினது அறையினில் இடம்பெற்ற இச் சந்திப்பினில் விடுதலைப்புலிகளின் தரப்பில் தமிழீழ நிர்வாகசேவை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் க.விஜிதரனும், படைத்தரப்பின்சார்பில் யாழ். மாவட்டப்படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோணும் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் குடாநாட்டினில் செயற்பட்டுவரும் சர்வதேச தொண்டரமைப்புக்களான யூ.என்.எச்சி.ஆர்., ஜி.ரி.எஸ். உள்ளிட்ட பல தொண்டரமைப்புக்களினதும் பிரதிநிதிகளும், பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பிரதேச செயலர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இடம்பெயர்ந்த மக்கள் வடமராட்சியின் மையப்பகுதிகளிலும், தென்மராட்சிப்பகுதிகளிலும் , பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் பரவலாகத் தங்கியுள்ளனர். அத்துடன் சுமார் 3000 இற்கும் அதிகமான குடும்பங்கள் முகாம்களில் இல்லாது அழிந்து போயுள்ள குடியிருப்புப்பகுதிகளிலும் , தமது உறவினர்களது வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இந் நிலையில் பாதிக்கப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து உதவித்திட்டங்களை அமுற்படுத்துவதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டே சில முகாம்களை மூடிவிடவும், அம் முகாம்களில் உள்ள மக்களைப் புதிதாக அமைக்கப்பட்ட முகாம்களில் குடியமர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (27)

## மட்டக்களப்புப் பகுதிகளை இந்தியத் தூதுவர் பார்வையிட்டார்

சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் நிருபமா செல் நேற்று மட்டக்களப்புப் பகுதிகளைப் பார்வையிட்டார்

மட்டக்களப்பு கச்சேரியில் அரசாங்க அதிபர் வே.சண்முகம் உட்பட நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளையும் அவர் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது பாதிப்புகள் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அவர் கேட்டறிந்தார். விடுதலைப் புலிகள் சார்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுவில் அங்கம் வகிக்கும் மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோரையும் நிருபமா சந்தித்தார். இந்த மாவட்டத்தின் அழிவுகளை நிவர்த்தி செய்ய நீண்டகாலத் திட்டம் மற்றும் இடைக்காலத் திட்டம் என இரண்டு திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்தனர். அரச நிர்வாகப் பிரிவு, விடுதலைப் புலிகள் நிர்வாகப் பிரிவு என இரண்டு நிர்வாகப் பிரிவுகள் இருப்பதால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களிற்கான உதவிகள் அவர்கள் ஊடாகவே வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். எந்த உதவியென்றாலும் சரி அரசாங்கத்தின் ஊடாகவே செய்யப்படும். வடக்கு கிழக்கு நிலமை தொடர்பாக கவனத்தில் எடுக்கப்படும் என இந்திய தூதுவர் பதிலளித்துள்ளார். காத்தான்குடி, நாவலடி, கல்லடி போன்ற பகுதிகளையும் நேரில் சென்று அவர் பார்வையிட்டார்.

## நேற்றைய நடவடிக்கையில் மூன்று உடல்கள் மீட்பு

வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மீட்புப் பணிகளில் மூன்று உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற மீட்புப் பணியில் ஒரு உடல் மீட்கப்பட்டது இதேவேளை முல்லைத்தீவு இறால் குளத்தில் ஒரு உடலும் அளம்பில்,பகுதியில் ஒரு உடலும் மீட்கப்பட்டுள்ளன.

(லோ,தீ,20)

## சமூகம் தரக்கோரிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் கல்விகற்கும் 1ஆம், 2ஆம்,3ஆம் வருட ஆண் மாணவர்களை இன்று சர்வதேச மாணவர் பேரவைக்குவருமாறு வேண்டப்படுகின்றார்கள். இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பிரதேசத்தின் மீள்துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளவேண்டியிருப்பதால் அப் பணியினை மேற்கொள்ளுவதற்காக மேற்குறிப்பிட்ட மாணவர்களை வருமாறு சர்வதேச மாணவர் பேரவை கேட்டுக் கொள்கின்றனர். (36)

## செயலணிக்குழுவுடன் தொடர்பு கொள்ள தொலைபேசி இலக்கங்கள் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பபட்ட வடமராட்சி கிழக்கு மக்களின் நடவடிக்கைகளுக்கான செயலணிக்குழுச் செயலக தொலைபேசி இலக்கம் ஊடாகத் தொடர்பு கொண்டு உதவிப் பொருட்களை வழங்குவதற்கு ஏற்ற வகையில் அதன் தொலைபேசி இலக்கங்களை வெளியிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தம்மாலான உதவிப் பொருட்களை வழங்கும் தனிநபர்கள், நிறுவனங்கள் உட்பட அனைவரும் பொருட்களை வழங்குவது பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதற்காக சதா-0114618212 அலுவலகம் 0712501593, 0602213559 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு புதுக்காட்டுச் சந்தி செயலணிக்குழு கேட்டுள்ளது. (லோ.தீ)

## கடற்றொழில் உபகரணங்கள் சுத்திகரிப்பு நடவடிக்கை

முல்லைத்தீவின் நகரப் பகுதியில் இருந்து இது வரை மீட்கப்பட்ட கடற்றொழில் உபகரணங்கள் அனைத்துக்குமான சுத்திகரிப்பு தண்ணீரூற்றில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறுவதால் கடற்றொழில் உபகரணங்களை வைத்திருப்போர் சுத்திகரிப்பிற்காகக் கொண்டு வருமாறு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா தெரிவித்துள்ளார். (20)

– கடலில் அடித்துச் செல்லப்பட்ட

## இந்தோனேசிய பெண் ஒருவர் ஐந்து நாட்களின் பின் மீட்பு

(லண்டன்)

சுனாமி கடற்கொந்தளிப்பால் கடந்த வாரம் கடலில் அடித்துச் செல்லப்பட்ட இந்தோனேசியப் பெண் ஒருவர் கடலில் இருந்து ஐந்து நாட்களின் பின் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கடற்கொந்தளிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட அசே கிராமத்தின் கடற்கரையில் இருந்து சுமார் இருநூறு கிலோ மீற்றர் தூரத்தில் பனை மரம் ஒன்றைக் கட்டிப் பிடித்தவாறு ஐந்து நாட்கள் கடலில் மிதந்தபடி இருந்த இருபத்து மூன்று வயதான மேலவதி என்ற பெண்ணே இவ்வாறு மீட்கப்பட்டவராவார்.

இவரை மீட்ட மீனவப் படகு மலேசியாவின் கரையைச் சென்றடைந்தது.தற்போது இந்தப் பெண் பெனான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### பாகிஸ்தானும்...

துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை இலங்கைக்கு 1500 படையினரை அனுப்ப அமெரிக்கா உத்தேசித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்பு நடவடிக்கைகள் முடிவடைந்துள்ள நிலையில் சர்வதேசப் படைகள் இலங்கையை நோக்கி நகர்த்தப்படுவது குறித்து பல்வேறு விதமான சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. அமெரிக்காவின் 20 உலங்குவானூர்திகளுடன் விமான்ம் தாங்கிக் கப்பல் ஒன்றுமுன்னதாகவே கொழும்பை வந்தடைந்துள்ளது. இன்று இலங்கைக்கு வருகை தந்துள்ள 200 அமெரிக்கப் படைகளுடன் 213 கடற்படையினர் இங்கு கால்பதித்துள்ளனர். அமெரிக்க கடற்கலங்களின் வருகைக்கு தேவையான முன்னேற்பாட்டுப்பணிகளை இவர்கள் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் காலியில் தங்கியிருந்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. தற்போது காலியில் இந்திய கடற்படையினர் தங்கியிருந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டுள்ள நிலையில் அவர்களுடன் அமெரிக்க படைகளும் இணைந்து செயற்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.இதேவேளை அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான

அன்ரனோச 130 ரக விமானங்கள் இரண்டு நேற்று கட்டுநாயக்க வானூர்தி மையத்தை வந்தடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.இவற்றில்30 படைவீரர்களுடன் மருந்துப் பொருட்களும் எடுத்துவரப்பட்டுள்ளதாக வானூர்தித் தளச் செய்திகள் தெரிவித்துள்ளன. இதற்கிடையில் பங்களாதேசும் ஒரு கடற்படைக் கப்பலை இலங்கைக்கு அனுப்பவுள்ளதாக பிறிதொரு தகவல் தெரிவித்துள்ளன.

இதேவேளை பிரிட்டனும் தனது கடற்படைக்கப்பலை இலங்கைக்கு அனுப்பியுள்ளது. (32)

### புலிகளின்...

கட்டளை இடும் அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் லங்கே தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த விஜயத்தின்போது சுனாமி கடற்கொந்தளிப்பால் கிழக்கு மாகாணத்தில் விசேட அதிரடிப்படையினருக்கு ஏற்பட்ட பாதிப்பையும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பார்வையிட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்வது தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாகவே உரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### பாதிக்கப்பட்ட...

ளதை அவதானிக்க முடிந்தது. இவர்களுக்குரிய உதவிகளை உடனடியாக வழ்ங்குவதற்கு தாம் முன்வந்துள்ளதாகவும் அவற்றை நேரடியாக அந்த அந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள அவசரகால செயலணிக் குழுக்கள் ஊடாக வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வுதவிகளை வேறு எந்த நிறுவனங்கள் மூலமோ அல்லது அரசாங்கத்தினூடாகவோ வழங்காமல் அவசரகால செயலணிக் குழு ஒன்று அமைத்தது மிகவும் நல்லதொரு திட்டம் அதனால் அவற்றின் மூலமே தாம் உதவிகளைச் செய்வது உடனடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்றடையும் என்றும் தெரிவித்தார். (கு,ச)

### பாதிக்கப்பட்டோரைத..

இதனைத் தொடர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ள ஏனைய மக்களுக்கும் உதவி வழங்கும் நிறுவனங்களின் துணையுடன் தற்காலிக குடில்களை அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமென அச் செயலணிக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நலன்புரி நிலயங்களில் தங்கியிருக்கின்ற குடும்பங்களுக்கான • வேலைத் திட்டங்களை மூன்று கட்டமாகப் பிரித்து முன்னெடுப்பதற்கான புதிய திட்டத்தை செயலணிக்குழு வரைந்து நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக என புதுக்காட்டுச்சந்தியில் அமைந்துள்ள செயலணிக்குழுவினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்தப் புதிய திட்டத்தின்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்தல் அதாவது உணவு,உடை,மருத்துவம், மக்களுக்குத் தேவையான அடிப்படைப்பொருட்கள் என்பனவற்றை வழங்குதல் இரண்டாவதாக சிறப்பு முகாம்கள் தெரிவு செய்யப்பட்டு மக்கள் கூட்டமாக அன்றி தனித்தனி குடும்பங்களாக குடியமர்த்தப்படுவர்.

இத்திட்டத்தின்படி மக்கள் 50 குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டு மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டு அதில் குடியமர்த்தப்படுவர். இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட பொதுக் காணிகளில் முதலில் மலசலகூடம், குடிநீர்க்கிணறு, பொது மண்டபம் சிறுவர்களுக்கான விளையாட்டு இடங்கள் என்பன உள்ளிட்டதாக 50 குடிசைகள் அமையும். இதற்கான வேலைத் திட்டங்கள் வரும் பத்தாம் திகதி முதல் துரிதமாக மேற்கொள்ளப்படும். மூன்றாவதாக பாதிக்கப்பட்டமக்கள் அனைவருக்கும் கடற்கரை ஓரத்தில் இருந்து 300 அல்லது 400 மீற்றர் தூரத்துக்கு அப்பால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மக்களுக்கான தொழில்வாய்ப்புடன் கூடிய நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பது இந்த மூன்று திட்டங்களுமே செயலணிக்குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (கு,ச,லோ,தீ)

### இழப்புக்களைக்...

பெயர்ந்த மக்கள் அனைவருக்கும் தன்னம்பிக்கையை ஊட்டும் செயற்பாடுகளிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை வடமராட்சி கிழக்கு மக்களின் உளவளத்தை மேம்படுத்தும் வகையில் நலன்புரி நிலையங்களிலும் உளவள மேம்பாட்டுச் செயற்பாடு நாளை முதல் ஆரம்பிக்கப்பட இருப்பதாக புதுக்காட்டுச்சந்தி செயலணிக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தமிழீழக்கல்விக்கழகத்தின் ஒருங்கிணைப்பில் முதற்கட்டமாக 60 ஆசிரியர்கள் செயற்படவுள்ளனர். இவர்களுக்கான ஒரு நாள் பயிற்சி இன்று காலை முதல் மாலை வரை கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் வழங்கப்படவுள்ளது.

பயிற்சி நிறைவடைந்ததும் இவர்கள் அனைவரும் நலன் புரி நிலையங்களில் உள்ள மக்களைச் சந்தித்து அவர்களின் உளநலத்தை மேம்படுத்தும் இந்நடவடிக்கை தொடர்ச்சியாக நடைபெறும் எனவும் புதுக்காட்டுச்சந்தி செயலணிக்குழு அறிவித்துள்ளது.

(கு,ச,லோ.தீ)

### இந்திய...

பதவியினை இவர் வகித்துவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.78 வயதான டிக்சித் இலங்கை இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை தயாரிப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டதாகவும் தெரியவந்துள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தின் மிக முக்கிய இராஜதந்திரியாகக் கருதப்படும் இவர் இலங்கை விவகாரத்தில் இந்தியா சார்பில் கூடுதலான பங்களிப்பை வழங்கி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் முக்கிய புலனாய்வுத்துறை பிரிவுகளாகக் கருதப்படும் மத்திய புலனாய்வுப் பணியகமான றோ மற்றும் ஐபி என்று அழைக்கப்படும் புலனாய்வுப் பணியகம் பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவு ஆகிய வற்றின் கண்காணிப்புக்குப் பொறுப்பானவராகச் செயற்பட்டு வந்த வர்.இதன் மூலம் இந்தியாவின் அனைத்துப் புலனாய்வு அமைப்புக்களையும் ஒருங்கிணைத்து பிராந்தியத்தின் சிறப்பான புலனாய்வு வலையமைப்பொன்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்திய ஆதிக்கத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் ஜே.என்.டிக்சித் ஈடுபட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.